உ

பரமபதி துணை

திருமாலிருஞ் சோலைமலை

பெரிய

அழகர் வர்ணிப்பு.

இஃது

மதுரை மகாகவிகம்பர் குலதிலகராகிய

இராமசாமிக் கவிராயரவர்கள்

இயற்றியதை

மதுரை மேலமாசிவீதி

மு. திருமலைமுத்துப் பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பெற்று

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திரவிலாசம் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1916.

Registered Copy Right.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருமாலிருஞ்சோலைமலை

அழகர் வர்ணிப்பு.

விநாயகர் துதி.

மூலப் பரஞ்சுடரே முப்பொருளே முக்குணமே
நீலப் பொருப்பே நினைவில்வளர் நிக்ஷயமே
பேழைவயிறும் பெருங்கிம் புரிக்கோடும்
வேழமுகமும் விளங்கியமுன் னூல்மார்பும்
ஐந்துகரமும் அழகான மத்தகமும்
சுந்தரஞ்சேர்காதுந் துதிக்கையும் நால்வாயும்
உயராகுவாகனமும் உற்ற பாசாங்குசமும்
ஜெயமார் மழுவும் ஜெகஜோதியாய் விளங்க
ஆலயங்கடோறும் அமர்ந்திருக்குங் கண்மணியே
சோலையெல்லாங்காத்திருக்கும் தும்பிமுகப் பிள்ளையரே
அங்கயற்கண்ணுளீன்ற அப்பனே முன்னடவாய்
மங்களஞ்சேர் பொற்ரு மரைக்கரையில்வாழுகின்ற
சித்திக்கணபதியே சிவபெருமான் புத்திரனே
முத்திக்கும் வித்தே முடிக்கனியும் ஜோதிமுத்தே
வல்லபையைத்தன் துடையில் வைத்தபெருமானே
நல்லவரங்கொடுத்து நடம்புரியவேணுமையா.

சுப்பிரமணியர் துதி.

கானமயிலேறுங் கதிர்வடிவேல்நாயகமே
ஞானமுருகா குமரா நாதாந்தபேரொளியே
கந்தாகடம்பா கட்டழகாயென்னேஇப்போ
வந்தாதரித்துமேநீ வரந்தரவும் வேண்டுமினி
குரம்பாடுகின்ற குறத்திமகிழுங் கணவா
வரங்கொடுத்தென்னுளுமெந்தன் வாக்கில்வரவேணுமையா.

சரஸ்வதி துதி.

தாயே சரஸ்வதியே சதுர்முகத்தோன் றேவியரே
மாயோன்மருமகனே வாக்கில்வரவேணுமம்மா
வெண்டாமரையாளே வெள்ளைநிறப்பூங்குயிலே
தண்டமிழ்தேர்வாணரிடஞ் சார்ந்தருளுந் தற்பரையே
காவிமலர்பூத்த கண்மணியே பெண்மணியே
நாவிலிருந்து நடம்புரியவேணுமம்மா.

அழகர் வர்ணிப்பு.

சோமசுந்தரர் துதி.

[illegible]பரஞ்சுடரே கடம்பவன மூலலிங்கதற்பரமே
அக்கரவம்பூண்ட ஆலவாய்ச்சுந்தரமே
எங்கும்நிறைந்தருளும் ஏகபராபரமே
மங்களமாகயிப்போ குழந்தைதனக்கு வரந்தரவும்வேணுமையா
இந்திரவிமானத்தில் அஷ்டகெஜ மிலங்கவேதானிருக்கும்
சுந்தரச்சொக்கையா துணைசெய்யவேணுமிங்கே.

மீனாட்சியம்மன் துதி.

நாற்பத்துமுக்கோண நடுவிருக்குநாயகியே
சிர்பத்திதந்தருள்வாய் தெய்வசிகாமணியே
மூவுலகம்புரந்த மும்முலேத்தடாதகையே
காவுலகம்போற்றுங் கயற்கண்மடக்கொடியே
பாண்டியமாதேவியெனப் பகருமீனும்பிகையே
வேண்டியபேர்க்கின்பமருள் வித்தகியேகாத்தருள்வாயே.

தேவர்கள் சித்தர்கள் துதி.

ஆதிசதுரகிரி அப்பன் மகாலிங்கம்
சோதிப்பலாவடியான் துணைசெய்யவேணுமிங்கே
முப்பத்துமுக்கோடி முனிவர்கணநாதர்
செப்புநவகோடி சித்தர்சத்தர்மாரிஷிகள்
கொங்கணர்கோரக்கர் குருமூலபோகரிஷி
வங்கணருஞ்சேரும்பதினெண் மாமுனிவரைப்பணிவேன்.

திருமால் துதி.

ஆதிவடமலையான் அப்பன் திருப்பதியான்
ஜோதிதிருவரங்கஞ் சோலேமலேகாஞ்சிபுரம்
ஆழ்வார்திருநகரி யனந்தபுரங்கோஷ்டியூர்
வாழ்வாய்மதுரை வழங்குஞ்சிதம்பரமும்
இவ்விடங்கள்தோறும் இருந்துவிளேயாடுகின்ற
செவ்வியுன்னமாலழகன் சேவடியைத்தஞ்சமென்பேன்.

மாரியம்மன்பேரில் வர்ணிப்பு.

மாதுகௌரி மகமாயி ராஜகன்னி
சாதுவேமாகாளி தாயேபராபரியே
மதுயெல்லேயின்கிழக்கே வாழ்ந்திருக்கும் மாரிமுத்தே
சதிராயெனக்குவரம் கிழக்குவாசற்காத்த சங்கரியே வாக்கருள்வாய்
தாயேதுரந்தரியே தெப்பகுளங்காத்த சாம்பிராணிவாசகியே
மாயிமகாமாயி தெப்பக்குளங்காத்த மணிமந்திரரூபகியே

தெப்பக்குளங்காத்த சீரானவீரபுத்திரி
செப்பமுள்ளமாரி திருவாக்குத்தந்தருள்வாய்.

காளியம்மன்பேரில் வர்ணிப்பு.

காளியேபகவதியே காரணியேகாளிமுத்தே
ஏழைதனைக்கண்ணாலே யென்தாயேபாருமம்மா
மலையாளதேசமெல்லாம் வாழ்ந்திருக்குங்காளியம்மா
மலையாதெனக்கு வரந்தரவேவாருமம்மா
பம்பைமுழங்குதம்மா காளிகபாலி பார்வதியுநீயுமிப்போ
சம்பையைவிட்டுத் தெற்குவாசல்தன்னில் பிரசன்னமானவளே
இள்ளைமொழியாளேஉக்ரசிம்மவாகினியேகிருபைவைத்துவாருமம்மா

பேச்சியம்மன்பேரில் வர்ணிப்பு.

வனப்பேச்சியெந்தனுக்கு வாக்கருளவேணுமம்மா
க்ஷணப்பொழுதில்வந்துயிப்போ மேற்குவாசல்காத்த ஜடாதரியேவாக்கரு
மயானத்தைக்காத்தவளே மகேஸ்பரியேயெழுந்திருநீ [ள்வாய்
இயாதியுள்ளபேச்சியம்மாள் கிருபைசெய்யவேணுமிப்போ
ஆருமறியாத அங்காளயீஸ்வரியே
வாருமம்மாயிப்போது திக்கெல்லாங்கொண்டாட வரந்தரவும்வேணுமம்மா

செல்லத்தம்மன்பேரில் வர்ணிப்பு.

பாண்டித்துரைமகளே வடக்குவாசற்காத்த பாப்பாத்தியெழுந்திருவே
வேண்டியுனைத்துதித்தேன் வடக்குவாசற்செல்வி வேதப்பிராமணத்தி
துர்க்கைசாமுண்டி வடக்குவாசற்காத்த துந்துமிபிடாரியம்மை
திக்கெல்லாம்போற்றும் மதுரைவடக்குவாசல் செண்பகச்செல்லம்பிகை
மாலைக்கழுத்தி யெனைப்பெற்றதேவி மஞ்சனைமார்பழகி
யாலதிரிபுரையே வடக்குவாசற்காத்த மாயன்சகோதரியே
அம்மாவந்திவ்வேளை யெனை ஆதரிக்கநேரமிது
இம்மானிலந்துதிக்க வடவாசற் செல்வி யிரங்கிவரவேணுமிங்கே.

கோசுகுண்டு ஒன்பது கம்பளம்

சக்கமாதேவிபேரில் வர்ணிப்பு.

உயர்வானகோசுகுண்டு ஒன்பது கம்பளத்தில்
ஜயமாக ஆடிநின்ற சக்கம்மாதேவியம்மா
பெற்றதாயைப்போல ஒன்பதுகம்பளத்தில் பேராக ஆண்டவள்நீ
சற்றேமனதுவைத்து இந்தச்சமயம் தானிரங்கவேணுமம்மா
உன்னைப்போல்தெய்வம் இந்தவுலகி லொருவரையுங்கண்டதில்லை
அன்னையேயிப்போது பாலன்றனக்கு அருள்தரவும்வேணுமம்மா
ஒன்பதுகம்பளத்தில் வந்தவருக்கெல்லாம் ஒழுங்காய்வரங்கொடுக்கும்
அன்பத்தோரட்சரியே சக்கம்மாதேவி அடியேனைக்காருமம்மா

இருளாயம்மன்பேரில் ஓரடி வர்ணிப்பு.

மட்டஞ்சிறிதாம் மதலைப்பிராயம் வணங்காமுடிநாடு
கொச்சிவளநாடு முத்துயிருளாயி குடியிருப்போகீழ்நாடு
ஆதிகிழக்குகுறவன்பதிக்கு அதிமறவன்சீமையிது
சின்னமறவன் எனைபெத்தஇருளே சிவகெங்கைப்பூமியிலே
பெரியமறன் எனையீன்ற இருளே பேர்போனநன்னாடு
மங்களநாடு இருளாயித்தாயே மறவன்பதிசீமைவிட்டு
மாலைகுலுங்கமுத்திருளாயி மணிமாலைநின்றசைய
ஒருகையிற்பிள்ளைகளும் எனைபெத்தஇருளு ஒருகையில்மைந்தனென்றும்
கக்கத்திற்பிள்ளையொன்று மார்பிற் கனகரத்தினமாலையொன்று
பதினாறுமக்களும் என்னைபெத்தஇருளே அக்கரையைகோட்டைகட்டி
சுத்திக்கிராய்வளைத்து இலைகுலுங்காநேரமதில் சூரியொன்றுகைவாங்கி
குட்டிகிடைக்கவில்லை யென்றுஇருளு குரம்பாடிநிற்கையிலே
ஒருத்திக்கொருமகளாம் ஒன்பதுமாதங்கெற்பமதில்
வயிற்றைக்கிழித்து ஆதிமறவன் வாங்கினான்பிள்ளையொன்று
பிள்ளைக்கறிசமைத்து இருபத்தொருவருக்கும் போடுமந்தவேளையிலே
அதிலையும்ஓர்பிள்ளைக்கு கறியோ அகப்படவில்லையென்று
குலவையிடும்வேளையிலே முத்திருளாயி குத்தினாள்சூலாடு
மனமோயிரங்கிலையோ பாட்டனாண்ட மறத்திவரக்கூடாதா
எவற்பொருளே என்னைக்குடிகொண்ட இளமறத்திவாவாவா
பாரமரத்தியடி என்னைக்குடிகொண்ட பழிகாரமுத்திருளே
மறவனுடசீமைவிட்டு என்னாட்சியிருளு வந்துவெளியோராயோ
பட்டுநிலம்புரளும் எனைபெற்றயிருளு பாடகக்கால்ஜோதிமின்னும்
ஆடைகொடியிலையாம் என்னாச்சியிருளுக்கு ஆபரணம்பெட்டியிலே
சோலைகொடியிலையாம் செல்வநகைபெட்டியிலே
மூக்குத்திசிந்தாக்கு எனைபெற்றயிருளுக்கு முன்கையிற்பூங்காப்பு
வந்தென்கலிதீரபாலன்றனக்கு வரமுமிகக்கொடுப்பாய்.

இருளப்பசுவாமிபேரில் வர்ணிப்பு.

மாசிக்களரியும் வருகும் இளம்பிறையில்
பாரிவேட்டைக்காக எனைப்பெற்றஇருளன் பதினைந்துநாழிகையில்
ஈரசந்திவேளை சத்தசாகரமூர்த்தி இருள்கவிந்த வேளையிலே
கட்டினார்லங்கோடு கையிற்றிருவோடு
கம்பியினால்இழைத்த செம்புக்கடுக்கன்காதில்
புலியும்புலித்தோலாம் புள்ளிமானாசனமாம்
மார்புரளபூணூலும் சத்தசாகரமூர்த்திக்கி மடிநிறைந்தவெள்ளோடும்
இரணகளப்பூமியிலே எனையாண்டஇருளன் இருந்துதவஞ்செய்கையிலே

தெற்கேவிழுந்தசடை எனேயாண்ட இருளுக்கு சிவகாமிபூஜைசெய்ய
மேற்கேவிழுந்தசடை இருளப்பமூர்த்திக்கி மேலுலகோர்பூசைசெய்ய
வடக்கேவிழுந்தசடை சத்தசாகரமூர்த்திக்கி வடகாசிபூசைசெய்ய
கிழக்கேவிழுந்தசடைஎனேபெத்தமூர்த்திக்கிகிழ்திசையோர்பூசைசெய்ய
அஞ்செழுத்துமந்திரமும் இருளன்குடிகொண்ட அன்பத்தோரக்ஷரமும்
முக்கோணசக்கரமும் சத்தசாகரமூர்த்தி முன்னேமான்பூசையிட
பூசையிட்டுத்தானிருக்க எனேயாண்டஇருளன் புதைகுழியாம்பூக்குடலே
ஒத்தமுகமும் சத்தசாகரமூர்த்திக்கி ஒருகுடலேப்பூவுகளும்
மல்லிகைமுல்லே மலர்ந்தமுல்லே இருவாக்ஷிமருக்கொழுந்து செண்பகமும்
பிச்சிமலரெடுத்து இருளப்பமூர்த்திக்கி உச்சிசடைதான்வகுத்து
சடைக்கொருலிங்கம் தபசுபண்ணும்வேளேயிலே
தவசோமுடியலேயோ ஆதிகிழவனுண்ட தாய்க்கிழவாமுத்திருளே
செத்தஇடந்தேடி ஜெபம்பண்ணும்வேளேயிலே
மாண்டஇடந்தேடி யெனேபெத்தஇருளன் மகாபூசைசெய்தாலும்
பூசைமுடிந்தது புதைக்குளிவிட்டு பூக்குடலேநான்தூக்கி
அஞ்சுமுகமும் ஆதிசிவன்மார்பிற் கொஞ்சிவிளேயாடையிலே
குடலேக்கோமோசமென்று எனேப்பெத்தஇருளு கோபமதாகவேதான்
பாண்டியன்கேணி பள்ளத்தெருவில் பவனிவரும்வேளேயிலே
பாண்டிமுனிவன்வந்து இருளன் கப்பரையை பங்கமதுசெய்கையிலே
அபயம்அபயமென்று அர்த்தசாமவேளே அலறுமந்தவேளேயிலே
இடதுபுரம்பொன்குடலே வலதுபுரம்மார்நாடு
வாதாடிவாதாடி யெனேப்பெத்தகருப்பு வாங்கினர்பூக்குடலே
வட்டோடுவாங்கவந்த பள்ளிவளர்த்த பரியலேயாமார்நாடு
மனமோயிரங்கலேயோ கோட்டசிங்கக்காரர் வைத்தாண்டமுத்திருளா

வருடாவருடம் புரட்டாசி மாதம்

மீனுக்ஷியம்மன் கோவில் நவராத்திரி கோலுவின் போது பேயோட்டுகிறதற்கு வர்ணிப்பு.

தேவிதிரும்பு திரிபுரையாளெழுந்திரியே
மாதுதிரும்பாயா மங்கையிடஞ்சென்ற மணவாளன்றேன்றலியே
மாதைத்தொடர்ந்தவனே இன்னுனெனவேவாக்கருளவேண்டுமம்மா
நாலாந்தலமாங் கோபுரத்தைக்காத்த நல்லமுனியையாநீ
கோபுரத்தைக்காத்த பாரச்சடையே கொத்தளத்துமாமுனியே
பெண்ணுள் மயங்குகிறுள் அவள்வருத்தந்தீரபிரசன்னமாகவந்து
கண்ணுலேநீபார்த்து மனவருத்தந்தீரக் கருணேயுடனேயிரங்கி
கன்னியைத்தொடர்ந்த காரணத்தைவாக்கருள்வாய்
காசிராஜன்பெற்ற கண்மணியேவீரையனே
மாதைத்தொடர்ந்த வல்லவாசொல்லேநீ
சங்கன்திரும்பாயா மாதைத்தொடர்ந்த சமத்தனெங்கேசங்கிலியே

போதைமயக்கமா மாதைத்தொடர்ந்த பொன்கருப்பேவாவேநீ
தண்ணீர்மயக்கமா தங்கையைத்தொடர்ந்த சமர்த்தன்வெளியேராயா
கெந்துகால்நொண்டி கிடந்தருளும்சப்பாணி
வாதக்கால்நொண்டி வல்லவாசப்பாணி
மாதைத்தொடர்ந்த வகைசொல்வதற்காக வந்திரங்கி ஆணிமுத்தே
கம்பைநதியாள் காமாட்சிவாசல் காத்தபிரதாளி
வம்பனுஞ்சோலைமுத்து இந்தமங்கையைநீகண்பார்த்து
கன்னியைத்தொடர்ந்த கட்டழகா சோலைமுத்தே
ஆதிநிலையும் அடியேன்றனக்கு அருள்புரியவேணுமையா
மட்டம்சிசுவில்இந்த மங்கைவிளையாடையிலே
மாடெடுத்துப்பாய மங்கைதிகிலுண்டாகி
மாதுபயந்தாள் மாமுனியுந்தான்தொடர்ந்தார்
தொடர்ந்தவழியிப்போ தோன்றவில்லையெந்தனுக்கு
பருவமும்தானுகிப் பக்குவமும்தானுகிப் பயிர்பயனில்லாதபடி
மாதுமலடாக வந்திருக்கிறளெனவே
என்னவிதமென்று தேவியிடத்திலிது விபரங்கேட்போமென்று
அம்பிகைமீனுக்ஷியெனைப்பெற்ற அம்மைகாமாக்ஷியரே
உன்னுடையகோவிலிலே அடிமைவந்து உட்கார்ந்திருக்குதம்மா
மங்கையைக்கண்பார்த்து அவளைப்பிடித்தமாந்தானையோட்டிவிடு
கண்பார்த்தருள்புரியும் எனைபெற்றதேவி காத்துரக்ஷித்திடுவாய்
கண்வாய்க்கரையும் கரையில்புளியடியும்
ஆலமரமும் அழகானதோப்புகளும்
வீட்டுவெளியேராயா உனக்கு வேண்டியதோர்சாமான்கள்
கொண்டுவந்துநான்தாரேன் குழந்தைமயங்காதே
சாமிதிரும்பு எனையாண்ட தங்கம்வெளியேராயோ
சமத்தனிறங்காயோ மயானத்தைக்காத்தசாமிதிரும்பாயோ
எதிரிமறித்தானே வரப்பாதையில்லாமல் இண்டுமுள்ளுபோட்டானே
மாத்தான்மறித்தானே எனையாண்டமுத்தா வழிபறிகள்செய்தானே
குழந்தைவருந்துவது உன் கொடிமுடிக்குக்கேட்கலையோ
பாலன்வருந்துவது ருத்திரகளப்பூமி பார்முழுதுகேட்கலையோ
பம்பைமுழங்குதடி பாப்பாத்தியெழுந்திரியே
கம்பைவிட்டுமுத்துராக்கு கதரிவெளியேராயோ
மாணிக்கக்கொண்டை மடியில்பிரளலையோ
சம்பங்கிகூந்தலை முத்துச்சாமி தலையையவிழ்த்துவிடு
மல்லிகைமுல்லை மலர்ந்தஇருவாட்சி மலர்சூடும்கூந்தலினால்
ஆடத்தெரியாமல் அறிவுகெட்டாபோனேடீ
சுத்தத்தெரியாமல் கண்கெட்டாபோனேடீ
இடமும்வலமும் இருபுறமுஞ்சுத்தலையோ
மாலைகுலுங்க மயிரவிழ்ந்து ஆடவியோ

கதம்பமணக்கலையே இன்னம்பூமியிற் கைபோடக்காணலையே
எட்டிப்பிடிக்கலையே இருபுரமும்சுத்தலையே
தொட்டால்விடாதா தொட்டியப்பிசாசோநீ
கட்டையிலுங்கட்டை யிதுபெரிய கருவேலங்கட்டை
தேரோஅலங்காரம் இன்றைக்கு தெருவெல்லாம்சிங்காரம்
பச்சையிலுப்பைவெட்டி பஞ்சவர்ணபல்லாக்கில்
ஏத்திவிடுவேன் இதுதெரியமாட்டாதா
தலையைவிரிக்கலையா சற்றுநேரமாடாயா
வீசத்தெரியலையா விளையாடமாட்டாயா
சுத்தத்தெரியாதா சுணைகெட்டாபோனாய்நீ
மட்டஞ்சிறிசு மதலைப்பிராயமடா
கொஞ்சவயது குரும்பைப்பிராயமடா
காயாமரமிதடா காயில்லாப்பூமரமாய்
மாதிடத்திற்சென்று மன்னவாசெஞ்சடையே
பாண்டிவளநாடு மழமதுரைநன்னாடு
தண்ணீர்க்கரைக்குத் தங்கவரும்வேளையிலே
செட்டிப்பெண்ணென்று தேடிச்சிறையெடுத்தாய்
பாப்பாரப்பெண்ணென்று பார்த்துச்சிறையெடுத்தாய்
கம்மாளப்பெண்ணென்று கருதிச்சிறையெடுத்தாய்
அகம்படியப்பெண்ணென்று அறிந்துசிறையெடுத்தாய்
பிராட்டியப்பெண்ணென்று வேண்டிச்சியைமெடுத்தாய்
எத்தனைநாள்கத்துவ்து இரங்கலையாசெஞ்சடையே
காணக்கிடைக்கலியே கண்ணுக்குத்தோணலியே
இல்லாதநாடு இருட்டுநாடாகுதம்மா
இடுப்பையொடிக்கலியோ இருபுரமும்சுத்தலியே
மாதுதலைவிரித்து மனம்போலஆடலியே
அஞ்சுசடைகொஞ்சிவர அழகுசடைமார்புரள
கொஞ்சுசடைபின்னலிட நீகோலாகலமாக
சுத்திவிளையாடே உன்பம்பைவிரித்து ஜோக்காகஆடாயோ
வந்திட்டான்வந்திட்டான் இந்தச்சமயம்மார்நாட்டுப்பொன்கருப்பு
இனிமேல்மயக்கமில்லை எனக்குவருத்தமில்லை
மதிமயங்கிடாமல் எந்தனுக்குநீயும் வார்த்தையொன்றுசொல்லிவிடு
மனதிலொன்றுமெண்ணமல் வார்த்தையொன்றுசொல்லிவிடு
புத்திமயங்காதே போகாதேநீதானும்
சத்தியமாகத் தான்சொல்லுவோர்வனம்
வார்த்தைரெண்டுசொன்னால் வம்புதும்புஞ்செய்யவில்லை
பார்த்துஆலோசித்துப் பகருவாயோர்வசனம்
என்றுதான்கேட்கபேய்பிடித்தபெண்ணும்இன்பமுடனேதுசொல்வா
இத்தப்பெண்மேலே இவ்வளவுநாளாக எனக்குப்பிரியமதாய் [ன்

இருந்தேனென்னைவிரட்ட யென்னைநினைத்தாய்பயலே
பெண்ணைவிட்டுநானகலேன்வேண்டியதோர்பிரட்டுருட்டுச்செய்தாலும்
இவளைப்பிரிய இந்தவருஷத்தி லெனக்குமனதில்லையடா
யாரென்றநீநினைத்தாய் சக்கிலியின்பெற்ற அருமையுள்ளபாலனல்லோ
வங்கொலையால்மாண்டு இந்தமாதைத்தொடர்ந்தவண்டா
எந்தவூர்நீர்சொல்லென்று யென்னைமருத்துக்கேட்டாய்
ஊரின்பேரென்னவென்று எந்தனைநீஉண்மையுடன் கேட்பதினால்
சொல்லுகிறேனானுமிப்போ எனக்குவேண்டுஞ்சாமான்துரைமகனேதந்தா
நடந்துவிடுகிறேன் மீனாக்ஷியம்மாள் நகரைவிட்டுப்போறேனென்று[க்கால்
சொன்னதற்குச்சம்மதித்தார் அப்போபிசாசு சொல்லத்துணிந்ததுகேள்
ஒன்பதுசீசாக்கள்ளும் ரொட்டிசாராயம் ஒழுங்காககஞ்சாவும்
கூடைதேங்காய்பழமும் இப்போதுஎந்தனுக்கு கொண்டுவந்துவைத்தபின்
இருபத்தோர்பணமும்என்னுடையஎல்லைதனிலியல்புடனேவைத்தாக்கால்
போறேனிதோஎனவேமனமகிழ்ந்துதானும்புன்சிறிப்புக்கொண்டுசெல்லும்
காரியாபட்டியும் கணவாக்கரையும் கரிச்சுக்குளத்தருகே
ஆலமாமுஞ் சோடிரண்டாக அருகேபுளியமரத்தில்
இருர்தேன்வெகுநாளாய் என்னையேனென்றுந்தேடவில்லை
இந்தமங்கைதானும் பருத்திக்காடுகாக்க இளமரத்தில்வந்தாடா
பாப்பாரப்பெண்ணென்று பார்த்துப்பிடித்தேனான்
மங்கையைவிட்டால் வழியொன்றுமில்லையடா
அம்மனுடையஆக்கினைசக்கிரம் அனலாயெரிக்குதடா
இந்தநல்லசக்கிரத்தை எந்தப்பேய்கண்டாலும்
சொல்லாமலோடுமே ஈஸ்வரிசக்கிரத்தை சொல்லமுடிகூடாதே
போறேன்போறேனெனவே நீபடுத்துந்துன்பம் பொறுக்கமுடிகூடலியே
என்றுதான்சொன்னவுடன் அவன்கேட்டதெல்லாம்இயல்பாகவேகுவித்து
சூடனைவாங்கிவந்துபெண்ணாள்கையாலத்டிதுச்சொன்னாளேபோறேனெ
போறேன்போறேனெனவே இவளைவிட்டுப்போனானேசக்கிலியன் [ன்று
இந்தமங்கைமேலே கனவிலும்யானும் இனிநினைக்கமாட்டேனென்று
முடிவாங்கிக்கொள்ளுமென்று முடிபிடித்துத்தான்கொடுத்து
போனதுபிசாசு அப்போதுமங்கை பொற்றாமரையில்மூழ்கி
மங்கைநல்லாள்தானும் மீனாக்ஷியம்மாளை மனதில்நினைந்துகொண்டு
போனாளேவீடுதனிற் சந்தோஷமாகப் புருஷனுடனேகலந்தாள் [டுத்து
சங்கிலியன்போனதினா லதேமுழுக்காய்தானிருந்து தலைமகனைப்பெற்றெ
சுகஜீவியாகவேதான் பதினாறுமக்கள்பெற்றுச் சுகமாகவாழ்ந்திருந்தாள்

முற்றும்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருமாலிருஞ்சோலைமலை

அழகர்வர்ணிப்பு.

சுவாமி திருவவதாரஞ் செய்தல்.

சீர்கொண்டிலங்குந் திருமாலழகன் ஜென்மித்தகாரணத்தை
பார்புகழயானுரைக்கப் பச்சைமால்தன்னைப் பணிந்துநமஸ்கரித்து
மாயன்திருக்கதையை மாநிலத்தோர்போற்ற வர்ணிப்பாய்த்தானுரைக்க
நேயமுடன் நெஞ்சகத்தில் நீலமேகம்பரமசாமி நிலையாகவேயிருப்பாய்
அம்புவியோர்கொண்டாட அழகமலைநாதன் அவதரித்தகாரணத்தை
தெம்புடனேயானுரைக்க திருவேங்கடநாதா திருவாக்குத்தந்தருள்வாய்
செந்திருமாலைத்தேடி தேவர்களும்பூமகளுந்தெரிசிக்கவேணுமென்று
வந்துதிருப்பார்க்கடலில் மாலழகமூர்த்தியைமனமகிழவேதுதித்தார்
கருங்கடல்போற்பாற்கடல்கார் மேகவண்ணன்கண்ணுறங்கும்யோகம்விட்
நெருங்கிவருந்தேவருக்கு நீலமேகசுவாமிநிரைவாய்வரங்கொடுத்து [டு
அனந்தசயனத்தைவிட்டு ஆதிமூலம்பரமசாமி அன்பாகவேயெழுந்து
நினைந்துநீமாயழகர் நீதிபரஞ்சோதி நேர்மையுடன்முன்னாளில்
வடமதுரையாளும் சூரசேனன்புதல்வன் வாச்தேவராஜனென்போன்
திடமாய்மணம்புரிந்த பெண்ணுக்கணிகலமாந் தேவகியாள்தன்வயற்றில்
பூமிபாரந்தீர்க்கப் புண்யபுருடோத்மன் புத்திரனாகச்செனித்த
நேயமுடன்திங்கள்பத்தும் தேவகிக்கு நேர்மையுடனேநிறைய
தருமந்தழைத்தோங்கசருவேஸ்வரனைத் தான்தேவர்போற்றிசெய்ய
கருமந்தவிர்த்துவிடக் கண்ணபிரான்றன்னைக் காசினியோர்கொண்டாட
ஆவணிமாதத்தில் அனந்தசயனன் அவதாரஞ்செய்கையிலே
தேவரெல்லாங்கொண்டாடத் தேவாதிதேவன்திருப்பாற்கடலைவிட்டு
சங்குசக்கரந்தனுவாள் சச்சிதானந்தனுக்குத் தண்டாயுதமுதலாய்
செங்கரங்கள்நான்கினிலுஞ்செங்கமலக் கண்ணனுக்குச்சிறப்பாய்தகதகெ
வாகனமார்பில் மாயாவதாரனுக்கு மலர்மங்கைகூத்தாட [ன
பாகாம்மழலைமொழி பாரளந்தமாயனுக்கு பவளவாய்தேனூர
வாய்த்தசிரசுதனில்வைகுண்டவாசனுக்கு மாமகுடந்தான்துலங்க
எய்ந்தரத்னகுண்டலங்கள் இலக்குமிநாதனுக்கு எங்கும்பளபளென
கவுஸ்துவாபரணம் காராழிவண்ணனுக்கு கண்டமதிற்றான் ஜொலிக்க
பவுத்தர்தொழும்தோளில் பஞ்சாயுதன்தனக்கு பாங்குவளையங்கள்மின்ன

போதமணிமேகலைகள் புண்ணியபுருடோத்தமனுக்குபொன்னுடைமேல்து
ஸ்ரீதரன்றன்பூமுடிமேற்றுளபமலர்மாலை திக்கெங்கும்தான்மணக்க [லங்க
கருமேகந்தன்னிலொருசெங்கமலக்காடுகனிவாகப்பூத்ததுபோல்
திருமேனிதான்துலங்க செங்காழிக்கையன் ஜென்மித்தார்பூமியிலே
மூவருந்தானவனாய் மோகினிசொரூபன் முத்தொழிலுந்தானடத்தி
தேவுருவாய்வீற்றிருக்குந் திருமாலழகன் ஜென்மித்தகாரணத்தை
கண்டேயதிசயித்து வசுதேவராஜன் கண்கொள்ளாப்பேரின்பங்
கொண்டுமனமகிழ்ந்து கோவிந்தநாயகனைக் கொண்டாடித்தான்துதிக்க
துதித்ததகப்பனுக்கு சோலைமலையழகன் சொல்லுவாரிவ்வசனம்
மதித்தஆய்ப்பாடிதனில் நந்தகோபன்றேவி மாதுஅசோதையுமே
பெற்றிருக்கும்பிள்ளைதனை இன்னதென்றுபிரசவத்தின்வேதனையால்
உத்தறியமாட்டாமல் ஓரறையிலசோதை உறங்குகிறாள்பெண்மாது
இத்தருணந்தன்னில் இருகையாலென்னை யேந்திநீரவ்விடத்தில்
வைத்தவள்தான்பெற்ற செல்வமகளையெடுத்தேவருவாய்
வஞ்சமுள்ளகஞ்சனுயிர் வசுதேவமன்னா மடியவேசெய்துவிட்டு
மஞ்சனெனவுந்தன்னிடம் மாயாவுதாரன் வந்திடுவேனென்றுரைத்தார்
இந்தவிதமாக இலக்குமிநாதன் இனிமையாய்வார்த்தைசொல்ல
தந்தவசுதேவருடன் தேவகியாள்தானே மனங்கலங்கி
வருத்தமுற்றாரவ்வேளை வானோர்க்குபகாரன் மாதாவைத்தான்தேற்றி
தருத்தியுபசரித்து ஜெகன்மோகரூபன் சிறியவொருபிள்ளையைப்போல்
வடிவெடுத்தாரப்போது வரதவெங்கடேசனை வாரியெடுத்தேயணைத்து
கடிமலர்க்கையாலேந்தி வசுதேவராஜன் கனிந்துவழிகொண்டிடவே
இருகால்விலங்குகளாங் கோட்டைவாசற்கதவு யிட்டுவைத்ததாப்பாளும்
திருகாமலேகிடவே வீடுதனிற்காத்திருந்த சேவகர்கண்துயில
கோட்டைதனைக்கடந்து வசுதேவராஜன் கொண்டுவழிகூடிவர
வாட்டமில்லாலோகமெல்லாம் மாயாவிநோதன்வழங்கிவிட்டமாய்கையினா
இருண்டுகருகருத்து எழுமுகில்கூடி யிடைவிடாமற்பரவி [ல்
மருண்டுகாலூன்றி சப்தமேகஞ்சேர்ந்து மழைமாரியாய்ப்பொழிய
ஜோதிமிகக்கண்ணபிரான் சுவாமியழகுள்ள தோற்றம்வழிகாட்டிடவும்
ஆதிசேடன்படங்கள் அகநிலைத்தேவனுக்கு ஆயிரமும்வெண்குடைபோல்
மீதேசிரசருகில் தலையாயிரமுடையோன் விரித்துவரவப்போது
மாதேவகிமைந்தன் றனைக்கொண்டு வழியேவரும்போது
பாற்கடலைவிட்டுப் பாரளந்தமாயோன் பார்தனில்வந்தானெனவே
எற்கயமுனைநதி மாயவனைக்காணுவர்போலிருகரையும்பொங்கிவர
வந்தனெனவறிந்து பொங்கும்யமுனை வழிவிலகித்தான்கொடுக்க
சிந்தாகுலந்தீர்ந்து வசுதேவராஜன் சென்றாராய்ப்பாடியிலே
பிறந்தபிள்ளையின்னதென்று நந்தகோன்றேவி பிரசவத்தின்வேதனையால்
உறங்கும்பொழுதில் உலகளந்தமாயோனை ஒருவருக்குந்தோணாமல்

தான்வைத்தரைவீட்டில் யசோதைபெற்ற தையல்தனைத்தானெடுத்து
தேன்வைத்தமாலையினுன் வாசுதேவராஜன் சென்றுமனையிற்புகுந்தான்
கொண்டுவந்தபெண்மகவும் அந்தஅரைவீட்டிற் கூகாவென்றேயழுக
கண்டுவடிவாளுருவி பொல்லாதபாவி கஞ்சனெனுமகாதுஷ்டன்
தனக்கிளையதேவகியாள் செங்கமலக்கையால் தழுவுகின்றபெண்ணரசை
வன்பளிக்குப்பாறையின்மேல் பெண்மகவை வாரியடிக்கவென்று
முன்கரத்திற்பெண்குழந்தை தன்காலைமுடுகிப்பரித்தெழுந்து
வாரியடிக்குமுன்னே கஞ்சன்றன்மார்பிலிடிவீழ்ந்ததுபோல்
மூரியுதைத்தண்டமுதல் மற்றமூவுலகமும்பதற
வானிற்பிறைபோல் இரண்டுகடவாய்தனிலும் வச்ரதந்தச்சோதியின்ன
மீனிற்பொதிந்து செம்பவளக்காடனைய வீரசடைபின்னலிட
மாற்பிற்கவுஸ்துமணி ஆதிபராசத்திக்கு வாகாய்ப்பளபளென
சார்புபெருஞ்சூலம் ஆதிபராசத்திக்கு தடக்கரத்திலேவிளங்க
காலிற்சிலம்பு ஆதிபராசத்திக்கு கலகலெனவேஜொலிக்க
பாலிற்சிறந்தமொழி கானகத்தில்வாழுகின்ற பைங்கிளிகளைப்பழிக்க
காளிவடிவாகி யெனைப்பெற்றதேவி கஞ்சனைப்பார்த்தோதுகிருள்
நீள்பளிங்குப்பாறையின்மேல் என்னைநீயடிக்ககாரியமேன் [ண்
ஒருவழியிற்போய்வளர்வான் அடாபாவிகம்சா உன்னைவந்துகொன்றிடுவா
வருபழியைத்தேடுவது அடாபாவிகம்சா மன்னவர்க்குதர்மமிதோ
என்றுசொல்லித்தான்மறைய கஞ்சனெனும்பாவியேக்கம்பிடித்தயர்ந்து
ஈன்றுதித்தபிள்ளைகளைகஞ்சனெனும்பாவியினிக்கொல்வேனென்றெழுந்
அதர்களையேவியபின் ஆய்ப்பாடிக்குச் சுரந்தமுலைப்பூதனையை [து
மாதர்களைப்போலே கஞ்சனெனும்பாவிவடிவெடுத்துக்கொல்லுமென்றுன்
வந்தவொருபூதனைமுன் வைகுந்தநாதன் வாகாய்த்தவழ்ந்தோடி
புந்திமகிழவந்த புண்யபுருடோர்த்தமனைப் பூதனையாள் தானெடுத்து
விடப்பாலமுதூட்டவேணுகோபாலன்மெல்லமெல்லவேசிரித்து
தடப்பால்முலையை தாமோதரப்பெருமாள் தன்வாய்தனில்வைத்து
குண்டலங்களாடக் கோவிந்தமூர்த்தி குறுஞ்சிரிப்புக்கொண்டுமுக
மண்டலங்கள்மின்ன மரகதமேனிக்கடவுள் வாயினுற்பேய்முலையை
உண்டுகடவாய்வழியே உலகளந்தமாயோன் ஓடவிட்டார்பாலையெல்லாம்
பண்தனப்பாலுடனே பூதனையாடன்னுயிரை வாங்கினதின்பின்னாலே
சகடாசூரன்றனையும் சங்காழிக்கையன் தாளாலுதைத்ததின்பின்
விகமாயம்பெருமான் பொதுவருடையவீடெல்லாம்போய்ப்புகுந்து
தயிர்பால்நெய்வெண்ணையெல்லாம் சர்வலோகேசன் தான்வாரியேபுசித்து
பயிலவே ஆச்சியரை பாற்கடல்வாசன் பரிகாசஞ்செய்திடவே
ஆச்சியர்களெல்லாம் நந்தகோன்றேவி யசோதையிடம் வந்துரைப்பார்
காச்சியபால்வெண்ணையெல்லாம் எட்டாதுரிமீதுகாணுதொளித்துவைக்க
வந்துவந்துதான்திருடி மாதவகோவிந்தன் வாகாய்புசித்திடுவான்
சிந்தையுடன்மூப்பிள்ளைமை செங்கமலக்கண்ணன் சிறிதேனுமெண்ணுமல்

பார்த்தவரெல்லாஞ்சிரிக்க பச்சைமாலச்சுதன் பரிகாசஞ்செய்திடுவான்
ஆர்த்தலுடன்பாலகனை தெண்டித்திப்போதடக்குவாயசோதையம்மா
என்றுமுறையிட்டவுடன் கோபியர்களெல்லவருமேகிடவே
சென்றார்களென்று சங்காழிக்கையன் திருவுளமகிழ்ந்திருக்க
ஏதொன்றுஞ்சொல்லாமல் நந்தகோபன்றேவி யிருந்தாளொருநாளில்
தாதவிழும்பூங்குழலாள் மகனைமடிமீதுவைத்து தயிர்கடையும்வேளையிலே
பொங்கியதுபாலெனவே நந்தகோன்றேவி பூரித்தெழுந்தோட
தங்குதயிர்த்தாளிதனில்தாயாரசோதையுந்தான் மறைத்தவெண்ணெயெலா
கையினால்வாரியுண்டு காயாம்புவண்ணன்காலோட்டங்கொண்டிடவே [ம்
தேடினுள்மையுந்தனையும் நந்தகோன்றேவி செல்வமகன்பின்னாலே
ஓடினளோடி உலகளந்தோன்மாதா வொருகொடியிற்றான்பிடித்து
வன்றிரன்சேர்கின்ற மாயாவதாரன் மருதமரத்தோரேலில்
கன்றணியுந்தாம்பாலே நந்தகோன்றேவி கட்டினளப்போது
வாய்ந்துகட்டுங்கட்டை வனமாலியானோன் வலுக்கொண்டிழுத்திடவே
சாய்ந்துமருதமரம்ஆதியிற்றான்பெற்றுவந்த சாபமதுதீர்ந்ததுவே
நந்தகோன்றன்னிடத்தில் நாகசயனன் நல்லமகன்போலிருந்து
சந்தோஷமாகவேதான் நந்தகோன்வீட்டில் தான்வளரும்போதினிமேல்

சுவாமி பசுக்களை மேய்க்கிறது.

பச்சைமாலச்சுதன் பத்துவயதில் பசுமேய்க்கவேணுமென்று
கொச்சைப்பசுவாயிரமும் மலையிலுங்கோடி கொடுவைபதினாயிரமும்
கமலையிலேஆயிரமும் வெடிவாயில்முன்னூறு காராவில்வண்ணலட்சம்
செம்மையிலாலரமும் ஜெகதீசன்மேய்க்கச் சிவலைப்பசுவோர்கோடி
வண்ணலட்சமேபசுவை மாயாவதாரன் வாகாகவுண்டுபண்ணி
அண்ணல்பலபத்திரனை ஆதிமூலப்பரமசாமி முன்னமேபோகவிட்டார்
வேகமுள்ளகன்றுகட்கு வேணுகோபாலன் வீரமணிதான்போட்டு
போகவிட்டார்காராவை புண்ணியபுருடோத்தமன் பூமிமிகத்தானதிர
இடையர்மக்களோடிருந்து இலட்சுமிக்குநாதன் இசைவானகானகத்தில்
தடையறவேகன்றுவை தண்டுளபமார்பன் தான்மேய்க்கும்வேளையிலே
பள்ளிகொண்டுதானெழுந்து பச்சைமாலச்சுதன் பார்த்தார்பசுக்களையும்
தள்ளிப்போய்மேய்ந்ததினால் தாமோதரக்கடவுள் தன்விழிக்குத்தோணாமல்
ஆத்திமரத்தடியில் அருளாழிவேந்தன் சாத்திவைத்தவேய்குழலை
பார்த்துமகிழ்வாயெடுத்து பரமபுருஷோத்தன் பண்பாகவாயில்வைத்தூ
ஊதினார்வேய்குழலை உம்பர்க்குபகாரன் உலகமெங்குந்தான்கேட்க
ஆதிசேஷனும்நடுங்க நீலமேகசுவாமி ஊதுசந்தர்தான்கேட்டு
ஐயன்குழலிசையை ஆய்ப்பாடியிலிருக்கும் ஆச்சியர்கள்தான்கேட்டு
மையல்மிகுந்து மாயாவிநோதன் வடிவழகுக்காசைகொண்டு
கைவளைகள்தான்சரிய கோபியர்கள் காற்சிலம்புபண்பாட
மைவளையும்பூங்கூந்தல் ஆச்சியர்க்கு மறுத்தோர் புறஞ்சரிய

இடையிலுடையவிழ சுந்தரராசமூர்த்தி யிருக்குமிடந்தேடிவர
படைவிழியார்நாணிநிற்க பச்சைமாலச்சுதன் பாவையரைத்தான்பார்க்க
பட்டமரங்களெல்லாம் அய்யனிசைகேட்டு பால்சுரந்துதான்தழைக்க
துட்டமிருகமெல்லாம் நெடியோனிசைக்குச் சூழ்ந்தேதிரண்டுவர
அரம்பையர்களெல்லாம் ஆதிமூலத்தின் அனுராகங்கேட்டுநிற்க
உரம்புகுந்தசூரியன்றேர் அய்யனிசைகேட்டு ஓடாமலேதிகைக்க
விமலனிசைகேட்டுக் கோரவாய்நாகம் விடப்பல்லமுதொழுக
கமலமெல்லாம் பொய்கைதன்னில்கண்ணனிசைக்கு கனியானதேனொழுக
பாவைபெருங்கூடம் பச்சைமாலிசையுண்டு பகைமறந்து சூழ்ந்திருக்க
காவைமுலையுண்ணாமல் கண்ணனிசைகேட்டுக் கன்றுகள்பிரமித்துநிற்க
ஆவினமுமேயாமல் அழகனிசையுண்டு அசையாமற்றானிருக்க
காவினமுஞ்சோலைகளும் கரியனிசைகேட்டு கள்ளொழுகிப்பூச்சொரிய
வண்டுபடாமாலைதனைச்செம் பொன்மணிமார்பிலிட்டவானவர்களெல்லோ
பண்டமுர்தமுண்டதிலும் பரமனிசைகேட்டு பாங்காய்மனங்குளிர [ரும்
தமயன்குழலிசையை சிந்தைபுளகிக்கத் தான்கேட்டானுடனே
உமையவளுமற்றெவருஞ் சந்தோஷமென்னு முவரிதனில்நீராட
படைக்குந்தொழிலைவிட்டுக் கலைமகள்சமேதனெனபங்கயத்தில்வாழ்பிரம
ணிடைக்குலத்தில்வந்தோன் ஆதிமூலத்தினிசைகேட்டுளமுருக
அப்போபசுக்களெல்லாம் அருமறைக்குமெட்டா தையனையுந்தேடிவர
செப்பமுடன்பாற்பசுவை செங்கமலக்கண்ணன் சேரச்சரிபார்த்து
மாடுசரிபார்த்து மாயழகமூர்த்தி மணிப்பசுவைக்காணோமென்றார்
ஓடும்பசுவதனில் உலகளந்தபாலன் ஒருபசுவைக்காணோமென்றார்
காலிசரிபார்த்து கரியமாலழகன் கமலைப்பசுகாணோமென்றார்
பால்போல்நிறமுடைய பாற்கடல்வாசன் பாற்பசுவைக்காணோமென்றார்
தப்பினபசுக்களெல்லாம் தண்டுளபமார்பன் இப்போதொருநொடிக்குள்
செப்பமுடன்கொண்டுவர சங்காழிக்கையன் சிறுவற்குறைத்திடவே
ஓடினார்சிறுவரெல்லாம் பால்பசுவைத்தேடினார்கானகத்தில்
வாடிமிகஓடிவந்துவணங்கிச்சிறுவர்களும் பால்ப்பசுவைக்காணோமென்றார்
வந்துபணிந்தவரை மாயாவதாரன் வாழ்த்திச்சிறுவருடன்
அந்நேரந்தனிலே காணாமற்போன ஆவுதனைத்தானழைத்து
பால்கறக்கவேணுமென்று பச்சைமாலச்சுதன் கோலக்கயிறெடுத்து
வாலிதனைக்கொன்ற மாயழகமூர்த்தி வரவழைத்தாரார்மதனை
ஆடிக்கறந்தாராம் அழகமலைநாதன் அஞ்சுலக்ஷம்பாற்பசுவை
பாடிக்கறந்தாரம் பள்ளிகொண்டமாயன் பத்துலக்ஷம்பாற்பசுவை
ஆயன்கறந்தகுடம் அகிலைதேவர்க் கரைக்குடமுங்காற்குடமாம்
பேய்ப்பான்கறந்தகுடம் விமலர்க்கனுகூலன் மேற்குடமுங்கீழ்க்குடமாம்
கொட்டிக்கறந்தாராம் கோபாலமூர்த்தி கோடிலக்ஷங்காருவை
பட்டிதனிலடைத்து பாரளந்தமாயன் பார்த்திருக்கப்பண்டொருநாள்
இட்டிவரும்நாரைதனை வாயைப்பிடித்து கிண்டியேகொன்றுவிட

எத்தனையோ ராக்ஷதர்கள் கஞ்சன்றன்னேவலினால் இடர்விளைக்கவந்தார்க
அத்தனைபேர்களையும் அருளாழிவேந்தன் ஆங்காரமாய்ச்செயித்து [ள்
கஞ்சன்றனை வதைத்து அழகமலைதனக்கு கருத்தாய்வரநினைத்து
தஞ்சமென்றதாசர்களை ரக்ஷிக்கத் தானடந்தாரழகமலை
வடமதுரைவிட்டு மாயாவதாரன் வந்தாரழகுமலை
திடமுடனேவந்தபின்பு திருமாலழகனுக்குத் திருப்பணியுண்டாக்கி
சுந்தரப்பொற்கோவிலிலே தாசர்களைக்காக்கச் சுவாமியுந்தான்வந்தபின்பு
சிந்தையிகமகிழ்ந்து அழகமலைதன்னிற் சிறப்பாகவேயிருந்தார்

சுவாமி அழகுமலைக்கு வந்ததின்பேரில் அவ்விடத்திலுண்டாகின விசேடங்களும் கோவில் விசேடங்களும்.

உதித்தஇளஞ்சந்திரனும் தெரிசிக்க உடற்களங்கந்தீருமென்று
மதித்தடியினிற்போக்கிமாயாவதாரனுக்கு வாய்ந்தவட்டவெண்குடைபோல
வந்துகவிந்ததெனக் கள்ளழகுநாதனுக்கு வர்ணமணிப்பொற்கலசம்
சந்தமிகுமூன்றுளதாந் தன்மைபெருஞ்சோம சந்திரவிமானந்துலங்க
சோமசந்திரவிமானமதை தங்ககுண்டபிராகாரஞ் சுற்றியழகாயிருக்கும்
சேமமிகுமாங்கதற்கும் ஸ்ரீவைகுண்டந் தென்றிசையில்நின்றிலங்கும்
வாமமிகும்மேற்றிசையில் வள்ளல்ஜெகதீசன் மகாலக்ஷ்மியுடனே
நேமமுடன்வீற்றிருப்பார் நீலமேகசுவாமிநிகழும் வடதிசையில்
அனந்தசயனமதாய்ப் பாற்கடல்வாசன் அமர்ந்தவலங்காரம்
நினைந்தமணிவண்ணன் இவ்வுலகத்தில் நிலையாகத்தான்விளங்கும்
சோதிவிமானத்தினுக்கு மிக்கவெளிப்புறத்திற் றாயமஞ்சனப்பாறை
ஆதிநிலையாயிருக்கும் துவாரபாலகாள்வாச லாங்கதற்குமுன்புறமாய்
விளங்குமதிற்குமுன்னே விண்ணோர்க்குபகாரன் விசியோகப்பாறையுடன்
வுளங்குசேத்திரபாலருமே நேத்தியுடன்பூவில் வாய்ந்திருக்குஞ்சந்நிதியாம்
அங்கதற்குஆதிஉக்கிரமூர்த்தி ஆரியன்வாசற்சிறப்பாம்
பொங்குமதற்குமுன்னே சுந்தரபாண்டியன் புதுப்பித்தபொற்கொடாரம்
காட்டுமதற்குமுன்னே கள்ளழகமூர்த்தி கருடாள்வார்சன்னதியும்
ஆட்டுநவரத்தினத்தால் அழகமலைநாதனுக்கு அறுகாபீடமுடனே
கருங்கல்லால்நாற்காலி காயாம்புமேனிக்கு கனத்தபெலிபீடம்
நெருங்குஞ்சிறைக்கருடன் ஆரவாரித்து நிறைந்ததுவஜஸ்தம்பமால்
கைக்கோளன்வாசல் லிங்கமநாயக்கர்செய்த கலியாணமண்டபமால்
மிக்கவண்டிவாசல் வேணுகோபாலனுக்கு வெகுநேர்த்தியாய்விளங்க
அண்டம்வரையூடுருவி யண்டமதற்கப்பாலுந்தானீண்டு
சண்டபானைத்தடுத்துக் கோவிலுக்குமுன்பாகத் தானெழுந்தகோபுரமும்

சன்னதி விசேடம்.

சனைந்துதிக்கினிலுஞ்சக்கராராஜமூர்த்தி எட்டெழுத்தினனைசெல்ல
ஓரைக்கொழிவியற்றும் உரகசயனன் உத்தியோகச்சக்கரந்தான்

சங்கரனும்மைத்துனர்க்குதண்டுளமார்பன் தங்கைமீனாள் தனக்கும்
மங்களங்கள்பொங்கமச்சாவதாரன் வரிசைசெய்யும் சன்னதியான்
மலரோன்படைப்பையெல்லாம் மாலழகன்மாற்றியும் பின்னேபடைக்க
பலமாம்வரவேண்டி ஆதிபிர்மதேவர் பணிந்துநிற்குஞ்சந்நதியான்
எண்ணுக்கடங்காத ரிஷிகள்முனிவருக்கும் இந்திரருக்குந்தேவருக்கும்
கண்ணுக்கடங்காத கள்ளழகமூர்த்தி காக்ஷிதருஞ்சந்நதியான்
தொங்கீதம்தாம்தாமென சுந்தரராஜமூர்த்தி தும்புருவும்நாரதரும்
சங்கீதம்பாடி அரம்பையர்கள் சதிர்கூட்டுஞ்சந்நதியான்
சித்தரும்மெய்த்தவர்க்குஞ்செங்கமலக்கண்ணன் திகழ்ஜீவமுத்தருக்கும்
பத்தருக்கும்வேணவரம் பாரளந்தமாயன் பாவிக்குஞ்சந்நதியான்
எட்டியடிவைக்கவென்னும் பொல்லாயிருமலடருங்கனிந்து
தொட்டிலுடன்பிள்ளை சுந்தரராஜமூர்த்திக்கு சுமக்கவருள்சன்னதியான்
பொற்கோட்டைகட்டிவானவரும் ஐம்பத்தாறுபூதலத்துமாந்தர்களும்
நற்கோட்டைகட்டிநிதநிதமும் நேர்ந்துவருஞ்சந்நதியான்
குடங்கட்டுச்சந்தணத்தை வெத்திலைபூசாரி கொண்டநாமாசமதில்
திடங்கட்டவேசாத்தும் பொற்கதவுசேர்ந்திருக்குஞ் சன்னதியான்
பாலவருங்கோலவருந் தேவருடன்மற்ற பாருலகிலுள்ளோரும்
காலவருந்தான்கூடி மிக்கதெரிசனைக்குக் காத்திருக்குஞ்சன்னதியான்
சங்கங்குமுகுமென என்னுளுந் தவில்பேரிகைமுழங்க
துங்கமிகுங்கற்பூரம் பத்திபத்தியாகத் தூபமிடுஞ்சந்நதியான்
சாம்பிராணிவாசம் ஜகன்மோகினிரூபனுக்குச் சுதாகாலமும்மணக்க [ண்
காம்புவைத்தகப்பரையில்கார்மேகவண்ணனுக்குகார்த்திருக்குஞ்சந்நதியா

பதினெட்டாம்படி உண்டானவிசேடம்.

பாங்குபதினெட்டாகப் பகுத்திருக்குஞ் செம்பொற்படிவாசலின்சிறப்பும்
ஓங்குநவக்கிரகம் ஒரெட்டொருபடியா யுற்றிருக்குஞ்சன்னதியில்
மலையாளதேசம்விட்டுப் பதினெட்டுலாடர் வந்துமிகவுங்களிப்பாய் [று
புலையகன்றலாடரெல்லாம் அய்யன்மணியாலயத்தில்புதைய லிருக்குதென்
ஓம்நமோநாராயணன் கள்ளழகமூர்த்தி உக்ரமதைத்தான்பார்த்து
வாமமிகும்உக்ரமத்தை சுந்தரராஜமூர்த்திக்கு வாங்கிதிரவியத்தை
எடுத்திடுவோமென்று பதினெட்டுலாட ரெல்லோருந்தான்சேர்ந்து
அடுத்துமந்திரஞ்செபிக்கப் பதினெட்டுலாடர்களை ஆதிமூலம்பார்த்து
காரியக்காரரிடங் கள்ளழகமூர்த்தியிந்தக் காரணத்தைப்போயுரைத்து
வீரியமாயங்கிருக்கும் பதினெட்டுலாடரையும் வெட்டிப்பலியாக்கி
அங்கவர்க்குஙகயறுப்பாய்வந்த அடங்காக்கருப்பணனை
பங்கமறலாடர்களை பரமபுருடோத்மன் பாங்காய்ஸ்தாபித்தபின்பு
பகர்ந்தபதினெட்டம்பொற்படியிற்காத்துப் பரிவாயிருமெனவே [ருந்தார்
உகந்துவரங்கொடுக்கபதினெட்டாம்படிக்கருப்பன் உண்மைநிலைகொண்டி,

தீர்த்த விசேடம்.

மாதவர்கள்கொண்டாட மாயழகமூர்த்தி வரவழைத்தமாதீர்த்தம்
ஆதவன்வந்தாடுகின்ற அழகமலைநாதன் அருவிமலைபூந்தீர்த்தம்
விரும்பியதையெல்லாம் இக்கலிசாலத்தில் மிகக்கொடுக்கமாதீர்த்தம்
அருங்கலியால்வாடுவோர்க்கு இக்காலத்தில் அருள்கொடுக்கமாதீர்த்தம்
மைந்தனின்றிவாடுகின்றோரிக்காலத்தில் வாகாயொருபொழுது
விந்தையுடன்போய்மூழ்கில் நற்புத்திரரைமேன்மேலும்பெற்றெடுத்து
வாழ்வுடனன்னோர்களெல்லாம் இக்காலத்தில் மாயோனருள்பெறவும்
கேழ்க்கில்சம்பத்தருளி யிக்கலியுகத்தில் கீர்த்தியருளும்தீர்த்தம்

கெருடாழ்வார் தீர்த்த விசேடம்.

கலிதீர்த்தருள்கொடுக்கும் கள்ளழகமூர்த்தி கருடதீர்த்தக்கரையும்
வலியுடையதேவர்களும் தினந்தோறுமங்கே வந்தாடுமாதீர்த்தம்
அரம்பையராடுதீர்த்தம் அங்கிலைத்தேவன் அருவிமலைப்பூந்தீர்த்தம்
வரம்பையிலுமாதீர்த்தம் மாயாவதாரன் வரவழைத்தநற்றீர்த்தம்
இப்பெரியதீர்த்தமதில் ஏகாந்தமாக இருடிகளும்சித்தர்களும்
செப்பும்கருடாழ்வார்தீர்த்தமதில் தினம்வந்துமூழ்குவரேல்
கண்ணாலேகண்டாலும் பூதலத்தோர் கையினாற்றொட்டாலும்
என்னாளும்வாழ்வுதருஞ் சுந்தரமூர்த்தி யிசைந்தழைத்தமாதீர்த்தம்

அனுமார் தீர்த்த விசேடம்.

தேவர்களும்காணாத அனுமானுடைய தீர்த்தக்கரையதனில்
யாவர்களுந்தானேகி அனுமார்தீர்த்தம் அன்புடனேதான்மூழ்கில்
மென்மேலுமுத்திதனை விண்ணோரும் விக்தையுடனேபயந்தும்
நன்னயமாகவேதான் மேனகையூர்வசியும் நலமுடனாடுந்தீர்த்தம்
வையகத்திலுள்ளோர்கள் உயர்தீர்த்தமதில்மாப்பிள்ளையும்பெண்ணுமதா
னைதயல்கரம்பிடித்து அழகமலைதன்னில் சதிபதியுந்தான்மூழ்கில்
வாழ்வுகளுமேபெருகி மாயோனருளால் வேணமக்களையும்பெற்றெடுத்து
தாழ்வுகுறையில்லாமல் மென்மேலுஞ்செல்வந்தான் பெருகிவாழ்வார்கள்

மலைவள விசேடம்.

அழகமலையும் ஆதிமூலம்பரமசாமி அருவிமலைக்கோம்பைகளும்
துளசிவனமும் சுந்தரராஜமூர்த்தி தும்பிவனக்காவுகளும்
கோம்பமலையுங் கோவிந்தமூர்த்தி கொல்லிமலைக்காவுகளும்
ஆம்பல்படரும் அருளாளிக்கையன் அழகானசேங்கைகளும்
பல்லாக்குகொம்பைகளும் பச்சைமாலச்சுதன் பஞ்சவடிதீர்த்தங்களும்
முல்லைஅருவிகளும் முகுந்தன்ஜகதீசன் முதலருவிக்கோம்பைகளும்
பெரியபாலத்தோப்புகளும்பிரமன்றனைமீண்றோன் பேரிச்சம்பண்ணைகளும்
கரிணிவிளையாடுங் கார்மேகநாதன் கருங்காலிபண்ணைகளும்
இருண்டவனமும் என்னையன் எலுமிச்சம்பண்ணைகளும்
திரண்டபூங்காவுகளும் திருமாலழகன் தேனருவிக்கோம்பைகளும்
சண்டவனமும் சுந்தரராஜமூர்த்தி ஜோதிவனக்கோம்பைகளும்
இண்டுவனமும் என்னையன் எலுமிச்சங்காவுகளும்

தும்பிகவிபாடும் துளபமணிமார்பன் சொகுசானமேடைகளும்
தெம்புடனேபட்சிகளுஞ் செங்கமலக்கண்ணன் தெரிசனைதேடித்திரியும்
செவந்திப்பூவனமும் செங்காழிக்கையன் சிறுகிளாப்பண்ணைகளும்
திவ்யசந்தமணக்குந் திருமாலழகன் சண்பகப்பூங்காவனமும்
வயிற்றுவலிப்பாறைதனில் மானிடர்களெல்லாம் வந்துபடுத்திருந்தால்
வயிற்றுவலிதானும் மாயோனருளால் மாயமாயோடிவிடும்
மண்டையிடிப்பாறைதனில் மண்டைவலியுள்ளோர்வந்துகையாற்றொட்டா
அண்டாது நோய்களுந்தான் ஆதிமூலம் அருளினதோர்பாறைகளும் [லும்
ஊராக்கிணறும்உலகளந்தமாயன் உறங்காப்புளிமரமும்
தீராப்பிணிபலவும் திருவேங்கடநாதன் தீர்த்துவைக்கும் பூண்டுகளும்
இவ்வனங்களுண்டுபண்ணி இலட்சுமிநாதன் ஏகி உல்லாஸமதாய்
அவ்வனங்கடோறும் அழகமலைநாதன் அழகாயிருந்தாராம்

அழகமலைச் சிறப்பு.

சீர்கொண்டிலங்குமலை ஜெகன்மோகரூபனுக்குச் செல்விதாலாட்டுமலை
பார்கொண்டிருக்குமலை பள்ளிகொண்ட மாயன் பதிந்த அழகமலை
நவகோடிசித்தரெல்லாம் நாராயணன்றன்னை நாடித்துதிக்குமலை
நவநாதர்போற்றுமலை துருவமகாராஜனுக்கு சாயுச்சியந்தந்தமலை
பரிமளங்கள்வீசுமலை பச்சைமாலச்சுதன் பத்தியுலாத்துமலை
இருள்விளக்கிநாகரத்னம் இலட்சுமிநாதனுக்கு யெங்கும் நிறைந்தமலை
தும்புருவும் கின்னரரும் சுந்தரராஜமூர்த்தியை தோத்திரம்செய்கின்றமலை
கிம்புருடர்பாடுமலை கேசவநாராயணன் கிருஷ்ணவதாரன்மலை
சந்தனமும் நீளகிலும் மிக்கமணம்வீசுந் தனிதேவதாருடன்
நந்தனங்கள்வாழுமலை நாகசயனன்றனை நாதாக்கள்போற்றுமலை

வெள்ளிமலைச் சிறப்பு.

கார்பூத்தபுள்ளிமலை காயாம்புமேனி கனிந்திருக்கும்வெள்ளிமலை
சீர்பூத்தவெள்ளிமலை செங்கமலக்கண்ணன்சிறந்திருக்கும்வெள்ளிமலை [மே
மயில்நடனஞ்செய்திடுமேவெள்ளிமலைச்சார்பில்மான்கள்வந்துபார்த்திடு
குயில்களிசைப்பாடுமே வெள்ளிமலைசார்பில்கொம்பில்வண்டுதூங்கிடுமே
வேதமுழங்குமலை வேணுகோபாலன் வீற்றிருக்கும்வெள்ளிமலை
கீதமுழங்குமலைகிருஷ்ணவதாரனைக் கின்னரர்கள் போற்றுமலை
அரம்பையர்களாடுமலை அகிலைத்தேவன் அமர்ந்திருக்கும் வெள்ளிமலை
வரம்பகன்றுநீண்டமலை மாயாவதாரன் வாழ்ந்திருக்கும் வெள்ளிமலை

அருவிமலைச் சிறப்பு

தீர்த்தஞ்சொரியுமலை செங்கமலக்கண்ணன் திகழுமருவிமலை
ஆர்த்தசிம்மவாழுமலை அழகமலைநாதன் அமர்ந்த அருவிமலை
மாந்தோப்பிருக்குமலை புதையல்தனைக்காத்து வலையன்மகன்வாழுமலை
சாந்தமிருக்குமலை சங்குசக்ராயுதன் சாரும்அருவிமலை

பொய்கையிருக்குமலை புண்ணியபுருடோத்தமன் பொருந்தும் அருவிமலை
செய்கைமிகுந்தமலை செய்யாள்கணவன் தேனருவிசூழ்ந்தமலை
நாதாக்கள் வாழுமலை நாராயணன்றனக்கு நாகந்தாலாட்டுமலை
வேதாபரவுமலை முத்துராக்காயி விளங்கும் அருவிமலை

கோம்பைமலைச் சிறப்பு.

பாவையிசைபாடுமலை பச்சைமாலச்சுதன் பசுமேய்க்குங்கோம்பைமலை
காவைவிளையாடுமலை கார்மேகவண்ணன் கன்றோட்டுங்கோம்பைமலை
மேகந்தவழுமலை வேணுகோபாலன் வேய்ங்குழல்நின்றாதுமலை
மாகம்பொருந்துமலை மாயாவதாரன் மகிழ்ந்துவிளையாடுமலை
சிலம்பாறுசூழ்ந்தமலை திருச்சோலைதன்னில் திருநடனஞ்செய்யுமலை
தலம்பார்த்துவந்தமலை தாமோதரப்பெருமான் சயனமுற்றகோம்பைமலை
செல்விதாலாட்டுமலை இல்லைகோவிந்தனுக்கு தேனாறுசூழ்ந்தமலை
கல்விபாராட்டுமலை காயாம்புமேனி கற்பகஞ்சூழ்கோம்பைமலை

பண்ணைமலைச் சிறப்பு.

கதலிபழுக்குமலை கருங்கடல்வண்ணன் களித்திருக்கும்பண்ணைமலை
முதிர்பாலருவிமலை மோகினிசொரூபன் முனிவோர்க்கருளுமலை
வனவேடர்வாழுமலை மாயாவிநோதன் வாழ்ந்திருக்கும்பண்ணைமலை
சினைமாடுலாவுமலை சங்காழிக்கையன் திருக்கருணைபூண்டமலை
அனுமாரிலக்குமலை அருளாழிவேந்தன் ஆழ்வார்துதிக்குமலை
மனுமாரிலக்குகலை வடவாலிலைதுயில்வோன்வரங்கொடுக்கும்பண்ணைமலை
வேங்கைபிடிக்குமலை வேணுகோபாலன் வேட்டையாடும்பண்ணைமலை
பாங்குளமுற்றபரபுருடோத்மன் பயிர்வளர்க்கும் பண்ணைமலை

சோலைமலைச் சிறப்பு.

கன்னல்வளருமலை களபமணிமார்பனுக்கு கதலிபலாகாய்க்குமலை
சென்னல்விளையுமலை செந்தாமரைப்பாதனுக்கு தேமாபழுக்குமலை
சிறைவண்டுலாவுமலை சீதாபிராமனுக்கு தேன்கூடுகட்டுமலை
இருடியர்துதிக்குமலை இலட்சுமிநாதனுக்கு இளந்தென்றல் வீசுமலை
மாங்கனிகள் காய்க்குமலை வராகவதாரனுக்கு வாசனைகள்வீசுமலை
தேங்கனிகள் காய்க்குமலை திருமாலழகனுக்கு திறந்திருக்குஞ்சோலைமலை
கார்மேகஞ்சூழ்ந்தமலை காயாம்புமேனியன் களிப்பாறுஞ்சோலைமலை
சீர்மேவும்புண்ணியமலை திருவேங்கடநாதன் சிந்தையுற்றசோலைமலை.

இடபமலைச் சிறப்பு.

கொன்றைமலர்மேவுதலால் மான்கனொடு கோளரவம்வாழுதலால்
வெண்மதிருடுதலால் ஆன்றதிறக்கங்கை விளங்குமுடியேற்றுதலால்
தலத்தோர்நெருங்குதலால் ஆதிசிவனைப்போல தான்சேரிடபமலை
நலத்தாலுயருதலால் நாட்டும்புகழ்படைத்த நான்முகஞ்சேருதலால்
கலைமான்மருவுதலால் வெற்றிபெருகின்ற கமலத்தில்மேவுதலால்
நிலையாய்விளங்குதலால் ஆதிபிர்மதேவனுக்கு நேராமிடபமலை

நங்கையர்களாடுமலை வீணைதனைப்பாடி நாரதர்கொண்டாடுமலை
சங்குமுழங்குமலை ஆதிமுனிவர்தொழுஞ் சதுர்வேதம்போற்றுமலை
புதையலிருக்குமலை புண்ணியபுருடோத்மனுக்கு மொக்ஷவீடானமலை
சதவேள்விசெய்யுமலை சங்குசக்கிராயுதனுக்கு சார்ந்தஇடமமலை
வீங்குருமிழ்தேக்கு வெற்றிவேர்முற்றும் விளையுமிடமமலை
தேங்குமஷ்டலட்சுமியும் ஒன்றாய்ச் சிறந்திடநின்றுமெலை
இம்மலைகள்தோறும் எம்பெருமானங்கு இருந்தேயடியவர்க்கு
செம்மையுடன்வேண்டுவரம் செங்மாரைக்கண்ணன் நீர்க்கமுடன்தர்தமலை

அழகர் மதுரைக்குவர அலங்காரச் சிறப்பு.

மண்டுகமாமுனிவர் வரதர்வெங்கடேசனுக்கு வாகாயபிஷேகம்
பண்டுபுரிவதற்கு மண்டுகமாமுனிவர்பாங்காகக்காசிதனில்
இருந்தசிவகங்கைதனை மண்டுகமாமுனிவர் இன்பமுடனேயழைத்து
பொருந்தவபிஷேகம் புண்ணியபுருடோத்மனுக்குப் புரிந்ததவப்பயனால்
மூந்துமுனிவருக்கு முசுகுந்தனைகாத்தோன் மோக்ஷங்கொடுப்பதற்காய்
சிந்தைதனிலேநினைந்து திருமாலழகன் தென்மதுரைவைகைதனில்
செல்லுதற்குவேண்டுமென அலங்காரப்பட்டர் சிறப்பாயகமகிழ்ந்து
சொல்லுதற்குக்கூடாத மிக்க அருவிமலைத் தூயதீர்த்தம்படிந்து
திருமஞ்சனமெடுத்துப் பரிகாரக்காரர் சிரசின்மீதிற்சுமந்து
தருமமிகுங்கோவிலிலே பரிசாரக்காரர் தயவாகக்கொண்டுவர
திருமாலிருஞ்சோலைமலை யழகமூர்த்தி திருவடிமீதில்பணிந்து
கருமாமுகில்போன்ற கண்ணபிரானுக்கு காட்சியுடன்நீர்சொரிந்து
வாசனைத்திரவியங்கள் அலங்காரப்பட்டர் வாகாகத்தானூட்டி
தேசனையமேனிதனில் தேவாதிதேவனுக்கு திவ்யவாசம்புனைந்து
அன்பாகமாயனுக்கு அலங்காரப்பட்டர் அபிஷேகம்செய்தபின்பு
முன்பாகமாயனுக்குப் பட்டர் முடிமேல்மகுடம்வைத்தார்
முப்புரிநூல்மின்ன அலங்காரப்பட்டர் முகுந்தன்மணிமார்பில்
செப்பமுடன்பூட்டி திருமாலழகனுக்குச் சிங்காரம்செய்தபின்பு
அன்பாய்சுயம்பாகி அகதிலைதேவனுக்கு அலங்காரநற்றளிகை
முன்பாகபாயாசம் மூவுளகைத்தானளந்தோன் முயங்குபுளியோதரையும்
சக்கரைப்பொங்கல் சர்வலோகேசனுக்கு சம்பாவுந்தோசையுமா
முக்கியமாய்வைத்து திருமலையாண்டார் முனிவர்மிகக் கொண்டாடி
ரெங்கராஜபட்டர் நீலமேகசுவாமிக்கு நிவேதனஞ்செய்தபின்பு
துங்கமுடன் கற்பூரந் தீபமொடுதூபம் துரிதமுடனேகொடுத்து
தடமால்வரையுடையான் சாரங்கபாணியைத் தான்பணிந்துநிற்பவர்க்கு
சடகோபஞ்சாத்தி தீரத்துடன் துளசிசாத்தினதின்பிற்பாடு
தங்கச்சிவிகைதனில் சங்குசக்ராயுதன் தானேயெழுந்தருளி
துங்கசுபதினத்தில் துளபமணிமார்பன் துரிதமுடனேமகிழ்ந்து
ஜீயர்முதாருடனே முத்திரைக்காரரெனச் செப்புகின்றபண்டாரி

வையம்புகழ்ந்த திரு மலையரம்பியார்கணக்கு மாலிருஞ்சோலைப்பிரியர்
நிருபாகக்காரர்களும் நீலமேகசுவாமிக்கு நேர்ந்திடுமுப்பான்பிரியர்
வருவார்தேவஸ்தானம் மாயழகமூர்த்திக்கு மகிழுமதிகாரிகளும்
பந்தனமாய்ச்சூழ பாண்டவர்சகாயன் பார்த்தேமனமகிழ்ந்து
சந்தணந்தாம்பூலம் அன்பாகசகலருந்தான்கொடுத்து
அப்பனெழுந்தாளும் அருளாழிவேந்தனை அண்டரெல்லாங்கொண்டாட
செப்புகின்றகோவில்தனில் தந்தசிவிகை ஜெகஜோதியாய்மின்ன
தேவர்மலர்மாரிபெய்ய திருவேங்கடத்தானை திக்கெல்லாம் போற்றிசெய்ய
மூவர்களில்முதல்வன் முகுந்தன்முராரியை முனிவர்களுந்தான்வணங்க
பேரிகையெக்காலம் பிரவனையின்றேன் றனக்குப்பெரியதவில்மும்முரசு
பூரிகைடங்காமுதலாய் புண்யபுருடோத்மனுக்குப்பொங்குபுயல்போல்முழ
பட்டுக்குடைகள்முதல் பள்ளிகொண்டமாயனுக்கு பலவிருதுமுன்சூழ[ங்க
கட்டுமுயர்குடைகள் காயாம்புமேனியனுக்கு கவிழ்ந்துநிழல்செய்துவர
சாமரங்கள்வீச சாரங்கபாணிமுன்னே தையலர்களாடல்செய்ய
வாமக்கருடனுடன் மச்சாவதாரனுக்கு மாருதியும் முன்செல்ல
வாசமிகுசாம்பிராணி மாயாவதாரனுக்கு வாசங்கமகமென
நேசமிகுபாகவதர் கீர்த்தனங்கள்சொல்லி நேர்மையுடன் பாடிவர
அரிகரியென்றசத்தம் ஆதிமூலம்முன்னே அண்டங்கிடுகிடென்ன
முராகரிகோவிந்தா முராரிஜகரட்சகா முகுந்தாரெகுராமா
என்றடியார்கொண்டாடஎம்பெருமாள் மேகவண்ணனெழுந்தார்திசைநோ
அன்றுமணிச்சிவிகை அண்டர்க்குபகாரன் அலங்காரமாய்த்துலங்க [க்கி
அதிர்வடியைத்தான்முழக்கி அழகமலைநாதன்முன்னே அங்குவெகுபேர்சூழ
முதிர்வேதநாதனென ஆதிமூலமென்றகரி முன்புவந்தமாயழகா
தேவர்களும்யாவர்களும் இந்தவிதமாக ஜெயஜெயவென்றார்ப்பரிக்க
மூலருக்குமேலான மூராரிஜெகதீசன் முகுந்தன் மணிச்சிவிகை

கோவிலைவிட்டு கோவிந்தனெழுந்தது.

ஆடிவருகுதாம் அப்பன்சிவிகை அருள்மிக்ககோவிலுக்குள்
நாடியதோர்கோவில்விட்டு ஆதிநாராயணன் நடப்பாய்வரும்போது
சோதியாய்ப்பட்டிமுதல் கல்லந்தரியும் துலங்குகின்றமாங்குளமும்
மேதினியிற்றான்சிறந்து மிக்கவளம்பெற்றவளர் மேன்மைநரசிங்கம்பட்டி
இக்கிராமங்கள் தன்னில் இந்திரகுலந்தவறாய் யிருந்தருளும்நாட்டார்கள்
தக்கமுகுந்தனுக்குகுடைசுருட்டி தீவர்த்திசார்ந்தபொக்கிஷப்பேழை
வாகாயெடுத்துவர மாயழகமூர்த்தி மனதில் மகிழ்ச்சிபொங்க
பாகானசொர்ணகிறப் பச்சைமாலச்சுதன் பல்லாக்குமீதேறி
சந்திரவிமானகோவில் சாரங்கபாணி தானேகடந்தெதிரில்
உத்தம்களஞ்சியத்தை உரகசயனன் உறுதியுடனேகலந்து
வண்டிவாசற்கடந்து திருமலைநாயக்கர்செய்தமண்டபத்தில்
அண்டர்புகழ்வேதியர்க்கு அழகமலைநாதன் யகத்திலைரதானங்கொடுத்து

கருப்பண்ண சவாமியை கோவிலில் காவல்வைத்து வந்தது.

பாங்குபதினெட்டாம் படிவாசல்முன்பாகப் பச்சைமால்பல்லாக்கு
ஆங்குவரநோக்கி பெரியகருப்பன் அப்போதுதானெழுந்து
கையறிவாள்மின்ன பெரியகருப்பனுக்கு கதம்பப்பொடிமணக்க
அய்யன்மலர்ப்பாதமதில் பெரியகருப்பன் அன்பாகவேவணங்கி
கைகட்டிவாய்புதைத்து பெரியகருப்பன் கரியமால்முன்புநிற்க
மைகட்டுநீலவண்ணன் பெரியகருப்பன் மலர்முகத்தைப்பார்த்துரைப்பார்
வருஞ்சித்திரைமாதம் பெரியகருப்பா வாய்ந்தபௌரணையில்
தருமந்தழைத்தோங்க பெரியகருப்பா தயவாகநாமெழுந்து
மண்டுகமாமுனிக்கு முத்திதனைக்கொடுக்க மதுரைவைகைமாநதிக்கு
விண்டுலகிற்கொண்டாட பெரியகருப்பா விரைந்துநாம்செல்லுவதால்
கோட்டைபதனம் பெரியகருப்பா கோபுரமும்தான்பதனம்
தாட்டிகஞ்சேர்ந்தோங்கும் பெரியகருப்பா சோமசுந்தரவிமானம்பதனம்
கருவலமும்தான்பதனம் பெரியகருப்பா கவின்கோவிலும்பதனம்
மருவற்றமண்டபமும் நாச்சியார்கோவில் மாகளஞ்சியம்பதனம்
கண்ணைஇமையாமல் பெரியகருப்பா காகம்பறவாமல்
திண்ணமுடன்காவல்செய்வாய் பெரியகருப்பா சென்றுவருவேனெனவே
மாலைபுஞ்சந்தனமும் பெரியகருப்பனுக்கு வாய்ந்தமரியாதைசெய்து
வேலைதனிற்கண்டுயிலும் வேதாந்தமூர்த்தி விரைந்துவிட்டார்பல்லாக்கை
தேரடியைவிட்டு திருச்சோலைவாசன் தெற்குவாசற்கடந்து
ஊரடியைநீங்கி காட்டுபிள்ளையார்கோவி லுண்மையுடன்விட்டகன்று
சீர்கொளம்மாமண்டபத்தின் ஜெகன்மோகினிரூபன்சென்றேயிளைப்பாறி
கார்கொள்ளகாயாம்புவண்ணன்கருணாகரக்கடவுள் கடந்தாராம்மண்டபத்
சங்குநாதம்முழங்கப் பொய்கைக்கரைக்கடுத்த சாலைவழியெம்பெருமான்
மங்களமாகவேதான் மாயாவதாரன் வருகிறார்சிவிகைதனில்
யானைபரிமுன்னடக்க அஷ்டதிக்கிலுள்ளோர் யாவர்களுஞ்சூழ்ந்துவர
சேனைபெருக்கமதாய் கள்ளந்தரிமண்டபத்தில் சிறப்பாகவீற்றிருந்தார்
செப்பமுடனங்கிருந்து சீதாபிராமன்சென்றேயிளைப்பாறி
அப்பன்திருப்பதிக்கு ஆதிமாமூலம் அன்பாகவந்திருந்து
தெரிசித்தபேர்களுக்கு தீவினையைப்போக்கத் திருத்துழாய்தானீந்து
பரிசுத்தமாகவேதான் பரிபூரணகடாக்ஷம் பாலித்தார்பக்தருக்கு
அவ்விடத்திலேசுகமாய் அழகமலைவாசன் ஆயாசந்தான்தீர்த்து
செவ்விமிகுமாலழகன் திருப்பதியைவிட்டுச் சிவிகைதனிலேறி
வருகிறார்தண்டிகையில் வராகவதாரன் மாவேகமாகவேதான்
சருவலோகாதிபனும் பூண்டிமண்டபத்திற் றனிருந்துவாறுறும்
மறவமண்டபங்கடந்து மச்சாவதாரன் வருகிறார்சவ்வாரி
திறமாங்கரைக்கிணறு திருப்பாற்கடல்வாசன் தீர்க்கமுடனேநடந்து
அஞ்சாக்கரத்துடனே ஈச்சனோடைப்பாதை அழகன்வரும்வேளையிலே

வஞ்சனையாய்மறிக்க மாங்குளத்துக்கள்ளர் வழிப்பரிகள்செய்யவென்று
கள்ளர்வழிமறித்து சிர்பாதர்தாங்கிகளை கலகமிகச்செய்தார்கள்
வள்ளவிதையறிந்து மாயமாய்வழிமறித்தகள்ளர்களை
உள்ளமதில்நினைத்து சோரர்களையெல்லாம் ஒருமிக்கவேபிடிக்க
கள்ளனைப்போலேயுருவம் காயாம்புமேனி காட்டியோர்மாயைசெய்தார்
கண்கள்தெரியாமல் கள்ளர்படையெல்லாம் கலங்கிமனம்வெகுண்டு
தண்டுளபமார்பனையும் மாங்குளத்துக்கள்ளர் தான்தொழுதாரப்போது
வழிமறித்திட்டார்க்கு மாயர்வதாரன் மனமகிழ்ச்சியுண்டாக்கி [து
விழிமயக்கத்தைதான்தீர்த்துவேணுகோபாலன் வேண்டுவரந்தான்கொடுத்
முத்துமணிபல்லாக்கில் முனிவோர்க்கருள்தந்த முகுந்தனுமேறிவர
அஸ்தமிக்குமுன்னே வெள்ளைமண்டபத்தில் அழகனுமேவீற்றிருந்தார்
வெள்ளைமண்டபம் அதனை விண்ணவர்க்குபகாரன் விட்டுவெளியேறி
கள்ளர்தொடர்ந்துவர ஆதிமூலப்பரமசாமி வள்ளல்வருகிறாரும்
திசமூணுமாவடியை செங்கமலக்கண்ணன் சீக்கிரமாககடந்து
புகழ்மஞ்சிக்கூடம்விட்டுபுண்ணியபுருடோத்மன் பொற்பல்லாக்கேகுதுபா
மாரியம்மன்கோவில்விட்டு நரசிங்கப்பட்டி நாட்டார்க்கிசையுடையான் [ர்
ஆரியலுமார்பன் ராமசாமிஅம்பலம் அலங்காரமண்டபத்தில்
காதனிளைப்பாரி பொற்கணுகளாற்செய்த நாலுகால்மண்டபத்தை
நீதமுடனேகடந்து நீலமேகசுவாமி சேர்மையுடனேவரவே
சத்தகடல்போலே சங்குசக்ராயுதன் தளங்கள்புடைசூழ்ந்துவர
சத்தமுடன்வாத்தியங்கள் சுந்தரராஜன்முன்னே தூயமுகில்போல்முழங்க
வெடிஎழுப்புஞ்சத்தம் வேணுகோபாலன்முன்னே விரைந்துகடல்போற்கு
படியேழுங்கொண்டாட பாரளந்தமாயன் பல்லாக்குஜோதியின்ன [முற
வளஞ்சேர்தல்லாகுளத்தில் வரதவெங்கடேசன் வாழுமணியாலயத்தில்
பளபளப்பாயின்னும் பதினாறுகாலுடைய பாங்கானமண்டபத்தில்
அன்பாயிறங்கினார் அழகநிலைத்தேவனுக்கு அண்டர்புஷ்பமாரிபெய்தார்
முன்பாய்மறையவரும் முராரிமுகுந்தனை முனிவோரும்போற்றிசெய்ய

தல்லாகுளம் பெருமாள்கோவிலில்
அழகமலையானுக் கலங்காரச் சிறப்பு.

தயிர்பால்நெய்தேன்முதலாய் தாமோதரனுக்கு தானேமிகவளித்து
செயிரறபஞ்சாவமுர்தம் செங்கமலக்கண்ணனுக்கு நீர்க்கமுடனேசொறிந்
சந்தனக்குழம்பு சங்குசக்ராயுதனுக்கு சாத்திநீராட்டியபின் [து
சுந்தரஞ்சேர்பட்டதனால் சுந்தரமூர்த்திக்கு தூயநீரைத்துடைத்து
சூத்துக்கொண்டையிட்டு தூளபமணிமார்பனுக்கு சோமனைமேற்சார்த்தி
நேரத்துக்கொவ்வோர் நீலமணிபணிகள் சேர்மையுடனேபூட்டி
விலைக்கடங்காமணிமுத்து வைத்ததொருமிக்கபட்டுகுல்லாவை
நிலைக்கமுடிமீது நீலமேகசுவாமிக்கு நேயமுடனேசாத்தி

ஐயன்முகமதிக்கும் முத்துக்குல்லா அங்குயரத்தோன்றுவது [ம்
செய்யதொருசந்திரனை தாரகைகள் விண்ணில்தீர்க்கமரம் சூழ்ந்ததொப்பா
அக்குல்லாமுன்முகப்பில் அழகமன்காதனுக்குஅங்கலிக்கிமுன்னேவைத்து
தக்கமணிகாதிரண்டில் தண்டுளபமார்பனுக்கு சந்திரனுஞ்சூரியனும்
வந்துகவிந்ததுபோல் மாயாவதாரனுக்கு வயிரக்கடுக்கனிட்டு [டு
முத்தியசவ்வாததனுல்மோகினிசொரூபனுக்கு முன்முகத்திற்பொட்டுமிட்
சாந்தமரகதத்தால் சங்காழிகையனுக்கு தான்மேல்முருகுமிட்டு
வார்ந்தமாணிக்கமதால் மாமுகில்வண்ணனுக்கு வண்டிக்கடுக்கனிட்டு
சொர்னமயமாய்வளையஞ் சுந்தரராஜமூர்த்திக்கு தோளின்மேலேபுனைந்து
வர்னமணிமூதாரி மாயாவதாரனுக்கு மாணிக்கபொற்கொலுசு
முன்கைதனிதணிந்து முராரி முகுந்தனுக்கு மூர்க்கவைடூரியமும் [க
மின்கொள்நவரத்தினமும் வேணுகோபாலனுக்கு வெகுநேர்த்தியாய்துலங்
வைத்தகணையாழிதனை மரகதமேனிக்கடவுள் மணிவிரலின்மேலணிந்து
நத்தினையகண்டமதி நாருயணன்றனக்கு நான்கவுஸ்துவம்புனைந்து
பைந்துளபமாலைதனை பாற்கடல்வாசனுக்கு பரிமளிக்கமார்பிலிட்டு
முத்துப்பவளகோர்வை முகில்வண்ணாநாதனுக்கு மோனமாலையிட்டு
தங்கமயமாகத் தாமோதரனுக்குச் சமைத்தசரப்பளியும்
பொங்கியசந்திராரமுடன்புண்யபுருடோத்மனுக்குப் பூட்டினுர்முத்துவடம்
மகாலட்சுமிவாழ மார்பிடத்திற்பெற்ரு மதைத்தேனைத்தான்விரும்பி
சுகாகீதவண்டினங்கள் சூழ்ந்தவிதமென்னத் துலங்குமரகதத்தால்
பதக்கம்பளபளென பள்ளங்கொண்டமாயனுக்குப்பாங்காகவேபுனைந்து
உதிக்குமிளஞ்சந்திரன்போல உலகளந்தோனுக்கு உத்தரீகந்தானணிந்து
காவினிற்பொன்னுல் வீரகண்டாமணியைக் கலகலெனவேசாத்தி
சாலமுள்ளபொற்கொலுசும் சுவாமிக்குத் தண்டையுமன்பாய்பூட்டி
சந்தனபன்னீர்புனுகு சர்வலோகேசனுக்கு சவ்வாதுகஸ்தூரி
சுந்தரஞ்சேர்மார்பினிலே சூராதிசூரனுக்கு தோற்றமுடனேபுனைந்து
வல்லையமும்நேரிசமும் மாயாவதாரனுக்கு வாள்வேல்சமுதாடு
அல்லைவென்றமேனியனும் அருளாழிவேந்தனுக்கு அம்புவில்லும்தான்சாத்
மல்லிகைமுல்லை மண்ணளந்தபாதனுக்கு மருவுமிருவாட்சி [தி
சொல்லியபுஷ்பமெல்லாம் சுந்தரராஜனுக்குத் தூயமணந்தான்வீச
பூட்டியலங்கரித்து புயங்கடனுக்கும் பேரந்தவலங்காரமிட்டு
மேட்டுமையாய்ப்போற்றியபின் பட்டர்மிகமகிழ்ந்துதானிருக்க
ஸ்ரீரெங்கப்பட்டருந்தான் தேவாதிதேவனுக்குத் தீபதூபங்களுடன்
பாரெங்கும்போற்ற பச்சைமாலச்சுதற்கும் பாங்காகபூசைபண்ணி
தீர்த்தஞ்சடகோபம் அலங்காரப்பட்டர் தெரிசித்தோர்க்குகொடுத்து
ஆர்த்தியுடன்செய்தபின்பு அழகமலைநாதன் யாவருக்கும்காட்சிநல்க
சமையனுடன்சங்கிலியை சங்குசக்ராயுதன் தானழைத்தாரப்போது
இமையோர்க்கிடர்தீர்த்த மாயழகமூர்த்தி யிருவரையுந்தான்பார்த்து

அதிவிரைவாய்நீங்க ளிருவருமே அஸ்வசாலைக்குள் நுழைந்து
குதிரையலங்கரித்து சீக்கிரமாய்க் கொண்டுவரவேணுமென்று
உமையாள்சகோதரராம் உலகளந்தமாயன் உரைத்தாருளமகிழ்ந்து
சமையனும்சங்கிலியும் வேகமாயஸ்வ சாலைக்குள்ளே புகுந்து
பதினாயிரமாலில் பகவானுக்கேற்ற பத்மநாமப்புரவியொன்று [ன்
அதிசயமாய்க்கொண்டுவந்து அஷ்டகோனப்பந்தலிலலங்காரஞ்செய்தார்க

குதிரைச் சிறப்பு.

முத்தியன்பருக்கருள்வோன் முகுந்தன்ஜகதீசன் மூர்த்திபரந்தாமன்
மோகினிசொரூபனரி முராரிகுதிரைக்கி முகமோநல்நீலவர்ணம்
பத்திபெருங்கண்கள்ரெண்டும் பாண்டவர்சகாயன் பச்சைமாலச்சுதன்
பரமசிவன்மைத்துனன் பாரளந்தான்குதிரைக்கிபச்சைமணிவர்ணநிறம்
கான்றமணிச்செவிகள் காராழிவண்ணன் கமலாசனிக்கணவன்
காகுத்தன்மேகநிறக்கண்ணன் குதிரைக்குக்கனிந்தநீலோற்பலமாம்
போன்றஅடிவயரும் புண்ணியபுருடோத்மன் புறமூன்றெறித்தோன்
புயங்கடந்தான்புனிதன் குதிரைக்குபுஷ்பராகத்திநிறம்
முத்தமிழும்போற்றிசெய்யும்மோகினிசொரூபன் முருகனுக்குமாமன்
முனிவோர்க்கருள்தருவோன்மூர்த்திக்குகுதிரைக்குமுதுவோசெம்மைநி
சத்தகன்னிமார்துதிக்குஞ் சாரங்கபாணிகண்பன் தாமோதரானந்தன் [றம்
சங்கராவீரன்சங்குசக்ராயுதன்சாமிக்குதிரைக்கு சரீரஞ்சுவேதநிறம் [ர்
வாயோபவளநிறம்மாயாவதாரர் உயர்கருடவாகனத்தான்வானோற்குபகா
வஞ்சகற்கணுகாதான் வள்ளல்குதிரைக்கு வால்நுனிச்செம்பஞ்சுவர்ணம்
தூயதொடைகான்குந் துளப்மணிமார்பன்சோலைமலைநாதன் சூரர்குலகால
சுந்தரராஜப்பெருமாள் சுவாமிகுதிரைக்கு சோதிபவளவர்ணம் [ன்
இகந்துதிக்குநாற்குளம்புமீனையாண்டநாதன் இமையோர்க்கருள்தருவோ
இரணியசம்மாரன் எந்தைகுதிரைக்குஇரணியபசும்பொன்னிறமாம்
மகந்துதிக்குநாதன் மாயாவதாரன் மரகதமேனிக்கடவுள்
வள்ளல்ஜெகநாதன்மாயோன் குதிரைக்கி வதனந்தலைநாசி
துங்கத்திருமார்பு அயனன்பர்நேயன் சுவாமிமலையழகன்
சுந்தரராஜப்பெருமான் சுவாமிகுதிரைக்கித் தோன்றுமிந்தான்கிடமும்
புங்கநல்லிரண்டுசுழி புண்யபுருடோத்மன் பூவுலகைதானளந்தோன்
புராரிமகிழ்மைத்துனன் பூமான்குதிரைக்குப் பொருந்துமேநெற்றிநடு
செல்வியுள்ளபின்பக்கம் ஜெயராகவன்முகுந்தன் திருமாலரிகேசன்
திவ்யமங்களரூபன் தேவன்குதிரைக்குசெப்புமிந்தரெண்டிடமும்
ஒவ்வுகின்றவொற்சுழியும் உமையாள்சகோதரன்உம்பர்பெருமான்திருமால்
உலகந்தனையளந்தோன்உத்தமன்குதிரைக்கி உண்மையுடனேதுலங்க

கர்மகாண்டம் ஞானகாண்டங் காயாம்புவண்ணன் கமலாசனிக்கணவன்
காமனுக்குத்தந்தை காகுத்தன்குதிரைக்கு காதுகளாம் இலங்க
தர்மவடிவானவள்ளல் சங்குசக்கிராயுதன் தசரதகுமாரன்
சர்வலோகாதிபன் சாமிகுதிரைக்குச் சாற்றும்பராபரம்
கண்களெனவேதுலங்கக் கருணாகரக்கடவுள் காராழிவண்ணன்
கருத்தனிராமன் கண்ணன்குதிரைக்கு கான்றவிதியேமுகமாம்
பண்கள்வளர்வால்நிறமாம் பரமபுருடோத்மன் பள்ளிகொண்டமாயழகன்
பங்கையவிலோசனன்பரமன் குதிரைக்கு பாங்கார்நிதானமென்பார்
முதுகுக்கலங்காரம் முளரிமலர்பிர்மனுக்கு முன்னாள்மறையுரைத்தோன்
முசுகுந்தனைகாத்தோன்மூர்த்திக் குதிரைக்குமொழிந்தபலநூல்களதாம்
புதியகிண்கிணிச்சிலம்பும் பூரணதியாகரன் பூமிதனைக்காப்போன்
புண்ணியகுணாகரன் புனிதன்குதிரைக்குப் பொருந்தபலமந்திரமாம்
ஆதவனுஞ்சந்திரனும் ஆதிமூலப்பொருளாய் அகிலஜெகதீஸ்பரனாய்
ஆலிலையின்மேற்றுயிலும் ஐயன்குதிரைக்கு அங்கவடிவாய்விளங்க
மாதவராகப்பிர்ம மந்திரகடிவாளம் மாமறைகள்போற்றவளருமுபநிடதம்
மாயோனுபாயன் வள்ளல்குதிரைக்கு மாராதசீனியதாம்
தத்துவங்களெல்லாந் தந்திதனைக்காத்தோன் தாமோதரப்பெருமான்
சாரங்கபாணிசாமிகுதிரைக்குத் தான்விளங்கும் ரத்னகுஞ்சம்
அத்துவிதமானோன் அகிலாண்டனாதன் ஆதிமாமூலன்ஐவர்சகாயம்
சரனடைந்தாரைக்காப்போன்ஆயன்குதிரைக்குஅலங்காரஞ்செய்திடவே
பஞ்சகல்யாணிதனைப்பாரளந்தமாயன் பச்சைமுகில்வண்ணபரமநயோக
பக்தர்களுக்கனுகூலன் பரமன்குதிரையைப்பார்த்தேயகமகிழ்ந்து
வஞ்சசர்க்கணுகாதான் மாயாவதாரன் வடவாயிலிலைத்துயன்றோன்
வாள்வெங்கடேசன் வரதராஜப்பெருமான் வைணவவேதப்பரிமேல்
மலர்பாதம்வைக்குமுன்னே மாமேகமாக மாதவவேதாந்தபரன்
வருணன்மேல்அம்புதொட்டேன்மாயோன்குதிரைமயூரகதிகாட்டிடுமாம்
இலங்குபரந்தாமன் ஏழைகளைப்காப்போன் இமையோர்க்கனுகூலன்
எந்தைகுதிரை இடபகதி செய்துநிற்கும்
மாயாவதாரனெங்கோன் வாள்விஜயனுக்குமுன்னாள் மைத்துனனுகச்சிறந்து
வன்பாரதமுடித்த வள்ளல்மணிக்குதிரை வானரவேகங்காட்டும்
காயாதபாலுண்டோன் கண்ணன்மணிவண்ணன் கருணாகரக்கடவுள்
காகுத்தன்றன்குதிரை கவிந்துவல்லர்போல்நடக்கும்
வீராதிவீரனரிவேதாந்தவேதன்விமலபுருடோத்மன்விண்ணோர்கனுகூலன்
விமலன்குதிரைவரு வேங்கைதனைபோல்நடக்கும்
திசைகளெல்லாங் கொண்டாட திருமாலிருஞ்சோலைமலை
தேவர்புருடோத்மன் திருமால்குதிரை திருநடனமாடிவர
இசைகொள்பிர்மாண்டமெல்லாம் இந்திராதிதேவன்தனையாண்டபோதன்
இலக்குமிநாதன் எந்தல்குதிரை இணைமுதுகின்மீதே

வேறு சந்தம்.

நன்னயமாகியதோர் ஸ்ரீவில்லிபுத்தூரில்வளர் நாச்சியாரம்மனுந்தான்
மன்னூர்க்குகந்தவளாஞ் சூடிக்கொடுத்தாள் மாலைதனைக்கொண்டுவந்து
போட்டார்மாலைதனைபுண்ணியபுருடோத்மனுக்குபுந்திமகிழ்ந்தேயிருந்தார்
நாட்டிலுள்ளமாஜனங்கள் மறையோடுங்கூடிநாரணனைத்தான்பணிந்தார்
கோவிந்தாவென்றசத்தம் கோபிகாலீலனுக்குக்கோலமுகில்போல்முழங்க
மாவிந்தாநந்தா வசுதேவன்புதல்வா வாமனசொரூபனென்று
தேவர்களுங்கொண்டாட திருமாலழகனை ஜெயவேந்தர்போற்றிசெய்ய
மூவர்களுங்கொண்டாட முராரிமுகுந்தனை முனிவோரடிவணங்க
கற்பூரவாசனென்று கார்மேகவண்ணனுக்கு கற்பூரநின்றிலங்க
பொற்பூருஞ்சாம்பிராணி புயங்கசயனுக்கு புகைமண்டியேமணக்க
ஆலவட்டஞ்சாமறைகள் அழகமலைநாதனுக் கங்கதிரேதோன்றிவர
தாலவட்டங்கொண்டாட தாமோதரனுக்குச் சாமரைகள்தான்வீச
முத்துக்குடையும் மோகினிசொரூபனுக்கு முழுநீலப்பொற்குடையும்
வெத்திக்குடைசூழ வேணுகோபாலனுக்கு வெண்குடைகள்தான்பரவ
சுருட்டியொருகோடி சுந்தரராஜமூர்த்தியைச் சுற்றியேசூழ்ந்துவர
கருடக்கொடிபறக்க அனுமக்கொடியுங் காந்திவெகுடால்துலங்க
நாகசுரம்பேரிகையும் நாராயணன்றனக்கு நவுரிடங்காமும்முரசு
பாகமுடனேமுழங்க பாற்கடல்வாசனுக்கு பலவாத்தியந்தொனிக்க
திருபாகக்காரரெல்லாம் நீலமேகசுவாமிமுன்னே நிலமையுடனேநடக்க
தருபாரதிகாரிகளும் கள்ளழகர்தேவஸ்தான முற்றசேவகரும்
கவிந்துவரவேயுலகில் காராழிவண்ணன் காணிக்கைகொப்பரையும்
குவிந்துஅலர்கொண்டுவர கோவிந்தமூர்த்தி கோவிலைவிட்டேகுதிரை
வருகுதாந்தன்னக்குட்டிக்கோனுருடைய மண்டபத்தைதான்கடந்து
திருக்கனெனுமண்டபத்தில் யாவருக்குஞ்சேவைதந்து காட்சிநல்கி
அசைந்துவருகுதங்கே அழகமலைநாதன் அழகுமணிக்குதிரை

ஆயிரம்பொன் சப்ரத்தலங்காரச் சிறப்பு.

இசைந்திடுந்தந்தைமாசம் எங்கள் சுந்தரராஜர்க்கிகல்பூர்வபக்ஷமதில்
சாமிதிருமால்முகுந்தன் றன்னுடையசப்பரத்துக்கேமுகூர்த்தம்
நேமமுடனேவைத்து வரதவேங்கடேச நேமியுடகோவில்தனில்
அழகர்தேவஸ்தானன் அறைந்திரண்டு அணிதிருபாகக்காரர்
புகழுடனேசூழ்மதுரை தேவஸ்தானம் போந்தவதிகாரிகளும்
தானீகருஞ்சூழ கூடலழகர் கோவிற்றானீகருந்தான்சூழ
பிரசனங்கள்திருமுகூர்த்தேவஸ்தானத்தார் பெருமையுடனேசூழ
வரமிகுந்த ஸ்ரீரெங்கராஜப்பட்டராலே வகுத்தகும்பபூசைமுதல்
ஆயுதபூசைநடத்தி அண்ணவிக்கொத்தனுடன் அலங்காரக்கொத்தனுமே
மாயிதவாய்த்தான்விளங்குவேலாயுத கொத்தன்வளர்சித்ரக்கொயவனிவர்

முன்னிலையாய்ச்சியம் முறையாயளவெடுத்து முகூர்த்தமது தான்புரிந்தார்
மன்னும்வெற்றிவேரதனால்சப்பரமுஞ்செய்து வைத்திருந்தாரோக்கியமாய்
சித்திரைமாதம் பூர்வபக்ஷத்தில் சிறந்திடுமேகாதசியில்
சத்தியபெருமாயிரம்பொன் சப்பரஞ்சோடிக்கத்தானே முகூர்த்தமிட்டு
குத்துக்காலோடுங் குலிசக்கால் வாங்குசட்டங்கூறுபலசட்டமதால்
சித்திரமாய்க்கோத்து சாலைபட்டரையுடனே சீர்விருத்தப்பட்டரையும்
கருணக்காலுஞ்சமைத்து ஒரேழுதூபி கனகமயமாய்முடித்து
வருணவிருத்தக்கூரடும் பாவாசுதேவன் மகிழவதாரங்கள்பத்தும்
கோலமுடனேநிறுத்தி ஆதிகருடாழ்வார் கும்பிட்டபாவனையை
சீலமதாகச்சமைத்து குத்துக்கால்தோருஞ் சிங்கங்கள்யாளிமுதல்
பலவுருக்களும்புனைந்து ஆயிரம்பொன்சப்பரத்திற் பஞ்சராகாசிவைத்து
நலமாகமுன்புறத்திற் பஞ்சவர்ணக்குறடு நாட்டியதின்மேலாகச்
சித்திரவர்ணக்காலும் பத்திரவேலிக்காலஞ் சேரடுக்குநேத்தியுடன்
கத்திகைக்கமான்கள்வைத்து நடுநாயகமான கவின்மொடுங்கைபக்கமதில்
விளங்குநாச்சியாரிருவர் விமானமுடன்தூபி வியனமத்தியமதனில்
வளங்குகரணக்கூடு சாலைகளோடேயடுக்கு வாய்ந்தமணிச்சாலைவைத்து
தலையலங்காரங்கள்செய்து தாக்காகநாசித் தலையாகவேசமைத்து
நிலைகொள்பாவாடைமுதல்கெந்தருவாள்முதலானநீள்தேவதைகளுந்தான்
சோடித்துக்கந்திருவர் நாரவனும்மற்ற தோரமுனிவரையும்
நீடித்தலங்கரித்துப் பஞ்சவர்ணமாலை நிகழ்பச்சையசுவமுதல்
யாளிசிங்கங்கள்வைத்து சித்திரவர்னபாய்க ளழகாயலங்கரித்து
மீளியனுமார்கருடன் எடுத்தாடும்பூதம் எழில்சித்திரபதுமை
எல்லாமலங்கரித்தார் எம்பெருமாள்மேகவர்னக் கிலங்குநவரத்தினத்தால்
பல்லார்புகழ்ந்தேத்தப் பாற்கடல்வாசனுக்குப் பாங்காகச்சப்பரத்தை
ஆதித்தமண்டலம்போல் ஆதிநாராயணனுக்கங்கேயலங்கரித்தார்
சாருத்தமூவுலகும் ஜகன்மோகரூபன் சப்பரங்கள்ஜோதியின்ன
வெட்டிவேர் சப்பரத்தில்வேதப்பிராமணர்கள்மேன்மையொடுபூசைசெய்ய
கட்டழகனை கமலாசனிக்கணவன் கருணையுடனேயெழுந்தார்
தங்கக்குதிரையுடன் தாமோதரப்பெருமா தயவாகவேநுழைய
சிங்கக்குருளையைப்போற் சப்பரத்தடியான் தெண்டனிட்டுநின்றிடவே
பருவட்டமுஞ்சூட்டிச் சப்பரத்தடியானைப்பார்த்தேமுகமலர்ந்து
பரிவட்டமிட்டுவரப் பச்சைமாலச்சுதன் பாங்காய்சல்வாரிவிட்டார்
ஆயிரம்பொன்சப்பரத்தை அழகுமலைநாதன் அங்கேரிட்டுப்பார்த்து
நேயமுடனேமகிழ்ந்து நீலமேகசுவாமி நேத்தியிதுவென்றுரைக்க
அலங்காரக்கொத்தனுக்கு அலங்காரப்பட்டர் அன்பாகத்தான்மகிழ்ந்து
துலங்குபரிவட்டம் அலங்காரப்பட்டனுக்குச் சூட்டியபின்னெம்பெருமாள்
கோமானெழுந்திடவே குவலயத்தோர்தேவர்களுங்கொண்டாடிநின்றிரஞ்ச
சாமரங்கம்போல்முழங்க மாயவதாரனுக்கு மலர்மாரிதான்பொழிய

இராமஜெயவென்றசத்தம் எனையாண்டநாதனுக் கெழுமேகம்போலதிர
அரவணையிற்றுயில்மேலே அழகுமலைவாழும் ஜயாஜெயமெனவே
மானிடர்கள்கொண்டாட நானூறுசீர்பாதம் வாய்ப்பாய்ரோமஞ்சிலிர்ப்ப
கானிலகுந்தோள்குலுக்கிச்சன்னதம்வந்தோர்போலகவிந்தேகுலவையிட்டு
தூக்கினூர்சப்பரத்தை சுந்தரராஜன்சப்பரம் தோளைவிட்டுதாண்டுதங்கே
ஏற்குமணிசப்பரமும் எம்பெருமானுக்கு எத்திசையுஞ்சோதிமின்ன
தங்கமகமேரு சங்குசக்ராயுதருக்குச் சப்பரமாய்வந்ததுபோல்
அக்கயினித்தான்வரவே அழகர்குதிரை யாடுதாஞ்சப்பரத்தில்
வருடஅனுமக்கொடியும் மாயாவதாரனுக்கு வாகாகமுன்றுலங்க
கருடக்கொடிபறக்க கள்ளழகமூர்த்திக்கு கட்டியங்கள்கூறிவர
சடகோபங்கொண்டுசெல்ல சாமிதுளசிதீர்த்தம் சாதிப்போர்முன்சூழ
கடகரிகள்மும்முரசு கருங்கடல்வண்ணனுக்கு காராழிபோல்முழங்க
வருகுதாஞ்சப்பரம் மாயாவதாரனுக்கு மாமேருவந்ததுபோல்
விருதுகொடிதுலங்க வெற்றிவேர்சப்பரம் விந்தையாய்கொண்டுவர
பாவாடைகொஞ்சப் பாரளந்தமாயனுக்குப் பலபேர்பேசிவர
பூவாடைபொற்குடைகள் புருடோத்மனுக்கு புண்ணியர்கள்தானிரட்ட
ருப்பல்குப்பலாய்நிதியும் கோதண்டபாணிக்குக் கொண்டுசிலருண்டியதில்
செப்பமுடனேசொரியசெங்கமலக்கண்ணனுக்கு சேர்ந்திடுநற்கோட்டைத
அங்குசிலர்கொண்டுவர ஆதிமாமூலம்ஆயிரம்பொன்சப்பரத்தில் [ன்னை
துங்கமிகுமாலழகர் துரகமதிலேறித் துருசாய்வரும்போது
மதுராபுரியில் யாதவர்களெல்லோரும் மங்களமாய்செய்துவைத்த
சதுரானமண்டபத்தில் சர்வலோகேசன் சப்பரமுடன்தானிறங்கி
அங்கிருக்கும்பொற்சபையும் திருக்கண்ஜோடித்த அலங்காரமும்பார்த்து
மங்களமாயங்கிருந்து யாதவர்க்கெல்லாம் மாயோனருள்கொடுத்து
சக்கரைபொங்கல்களும் சங்குசக்ராயுதன் சந்தோஷமாகவேதான்
முக்கியமாய்த்தான்புசித்து முகுந்தனெழுந்தார் மூவுலகங்கொண்டாட
இருபாரிசமும் பத்தஜனங்கள் இயற்றுந்திருகண்களுக்கு
கருமாமுகில்போலே கருத்தின்படியே காக்ஷிகொடுத்தேபுகுந்து
அண்டங்கிடுகிடென்ன அழகருடன்முன்னே அதிர்வெடிகள்தான்முழங்க
மண்டலமெல்லாங்குமிற மாட்டின்மேல்டங்கா மழைமேகம்போல்முழங்க

மாயன் வைகையில் வருஞ்சிறப்பு.

மருடமெட்டு.

வைகைநதிதனிலே மழைமேகவண்ணன் வரதவெங்கடேசன்
மாயழகமூர்த்தி வந்திரங்கும்வேளைதனில்
செய்வகைதனைக்கண்டு திருமால்தனைப்போற்றச் சீதயிருந்தொண்டர்
திருவாய்மொழிபகரச் சிறைக்கருடன்மீதேறி
வீரராகவப்பெருமான்மெய்மகிழ்ந்து வைகைதனில்வெகுநேரங்காத்திருந்
வேதவேதாந்தனெனும் மேகவண்ணனைப்பரவ [து

தீரமுடனுங்கவர்க்கு திருமாலைபரிவட்டந் திரமாகவேகொடுத்து
சிந்தையகமகிழ்ந்து செந்திருமால் சப்பரத்தில்
எறித்திருக்குங்கண்கள் எந்தைதிருமாலழகன் இரண்யசம்மாரன்
இமையோர்க்குபகாரன் எய்தியங்கங்குள்ளவர்க்கு
மீறியநற்காட்சிதந்து வேதாந்தமூர்த்தி விநோதநாதாந்தபரன்
மேதினியைத்தானளந்தோன் மேன்மையுடனேநடக்க
தோற்பையில்நீர்முகந்து துளபமணிமார்பன் தூயதிருவேங்கடவன்
சுவாமிமலையழகன் சோதிக்கு முன்பாய்சொரிந்தடியார்பின்சூழ
எர்க்கும்பிராத்தனையால் முடியில்மயிர்களைந்து இசைந்தகாணிக்கையிட்டு
எம்பெருமானைப்பணிந்து எல்லவருங் கொண்டாடத்
திரியெடுத்தோர்கள்சிலர் சேகண்டிதப்பு திறமான தாசரிகள்
செந்திருமாலைப்பணிந்து சீராகமுன்புவரம்
புரியடுத்தநாட்டைகொண்டுசென்னதம்வந்தோருடலம்
புளகாங்கிதமிகுந்து பூரிதடிக்கும் பெருந்தொனிகள்தானதிர
அப்பன்குதிரை ஆயிரம்பொன்சப்பரத்தில் அழகாய்நடம்புரிய
அங்கங்கேயுள்ள அழகுதிருகண்கள்தனில்
செப்பமுடனேபுகுந்து திருவேங்கடேசன் ஜெயராகவன்முகுந்தன்
செல்விதனைமார்பில்வைத்தோன் தீர்க்கமுடன்காட்சிநல்கி
இங்கிதமாய்நடந்து இராமாராயர்க்குவந்து இனியபெருங்காட்சிதந்து
இலங்குகணிமண்டபத்தில் இறங்கிவிடாயாரியபின்
தங்கமயமாய்த்துலங்கும் சப்பரத்திலேநுழைந்து தாமோதரப்பெருமான்
சர்வலோகாதிபன் சார்பிலுற்றமண்டபங்கள்

மால்முகன் வண்டியூர் போனது.

வேறு சந்தம்.

எல்லாங்கடந்து எங்கள்சுந்தரராஜன் எகிவண்டியூர்புகுந்து
வல்லார்புகழுஞ் சாமிக்கவண்டார்செய்த மண்டமத்திலேயிரங்கி
வெட்டிவேர்சப்பரமும் ஆயிரபொன்னாலே மிகச்சமைத்தசப்பரமும்
கெட்டியுள்ளவான்பரியும் அவ்விடத்திலேயிரங்கக் கேசவனங்கேயிருந்து
இளைப்பாரிபொன்னுசங்கர் மண்டபத்தில்மாயன் இரங்கியேகாட்சிநல்கி
விளைப்புநெல்சூழ்ந்திருக்கும் வண்டியூர்தன்னில் விளங்குகோபாலர்புகழ்
அலங்காரமண்டபத்தில் அழகுமலைநாதன் அழகாகவேபுகுந்து
துலங்கிவேதனமுஞ் சுந்தரராஜமூர்த்திக்கு தோற்றமுடனேபுரிய
அந்தரத்துந்துமிகள் அகிலாண்டநாதன்முன்னே அன்பாகவேயதிர
சுந்தரராஜமூர்த்திதனை சுரர்களெல்லாம்போற்றி சுகமாகவேமகிழ்ந்து
படமாத்துரைச்சேர்ந்த எழுகிராமங்களும் பாங்காய்கணக்கர்முதல்
து—மாம்பலகுடியும் சச்சிதானந்தனுக்குத் தானடக்கும்படியாய்
கொடுத்தசொர்ன தானியத்தால் கோதண்டபாணி குளிர்ச்சிபெறத் தான்
அடுத்தஅன்னதானமிட்டு பிராமணர்கள் அகமகிழமாயழகன் [மகிழ்ந்து

சயித்யோபசாரம் நடத்தியது.

பேர்மண்டபங்கடந்து திருவேங்கடென்னும் பெருமாள்கோவிற்புகுந்து
பார்மண்டலம்புகழ பாற்கடல்வாசன் பாங்காய்விடாயாரி
சீர்சந்தனக்குழம்பால் சீதாபிராமனுக்குத் தேகமெல்லாம்தான்சாத்தி
பேரிந்திரன்புகழ சயித்யோபசாரம் பிரபலமாய்ப்புரிந்து
வாகுபெருஞ்சேஷ வாகனத்தில்மாயவனை வாகாயலங்கரித்து
போகுவையர்மால்மேருவைப்போல் புருடோத்மன் புரப்பட்டார்வாகனத்
தேவதுந்துமிமுழங்க ஜெகன்மோகரூபன் சிறப்பாகதானெழுந்தார் [தில்

மண்டூகமாமுனிக்கு மாயன் முத்திகொடுத்து.

காவலர்கள்கொண்டாட கலாநிதியும்வந்து கடல்முகட்டிலேயுதித்தான்
மண்டூகமாமுனிக்கு மாயழகமூர்த்தி வரங்கொடுக்கவேணுமென்று
விண்ணவருங்கொண்டாடத் தேனூரமண்டபத்தில்விமலனும்தான்புகுந்து
அம்மண்டபத்திருக்குங் காரியக்காரர் அன்பாகவந்தழைக்க
செம்மையுடனேயிருந்து செங்கமலக்கண் ணன் திரமாய்த்தனைதுதிக்கும்
தவத்தாலுயர்ந்தோங்கும் மண்டூகமாமுனிக்குச் சாந்தமுக்தியுங்கொடுத்து
நவநீதசோரனெனநாராயணனை நான்மறையுங்கொண்டாட
பத்தியுலாத்தியபின் பச்சைமாலச்சுதர்க்கு பகர்தீர்த்தமும் சூட்டி
சுத்தியபிஷேகக் கள்ளழகமூர்த்திக்குத் தோட்டமுடனேபுரிந்து
வன்கருடவாகனத்தில் வாகசொரூபன்வாகாயெழுந்தருளி
நன்மையலங்காரம் நரசிங்கமூர்த்திக்கு நாட்டமுடனேபுரிந்து
தூபதீபங்களுடன் துளபமணிமார்பனுக்குச் சொல்லும்நிவேதனமும்
சோபமரச்செய்து சுந்தரராஜப்பெருமாள் தொழுவோர்க்கருள்புரிந்து
கருடன்மணிமுதுகில் கள்ளழகமூர்த்தி காளைமுகில்போலெழுந்தான்
விருதுபலமுன்னடக்க வேணுகோபாலனுக்கு மேளமொருபால்முழங்க
அதிர்வெடிடமீரெனவே அழகமலையானை யண்டரெல்லாங்கொண்டாட
சதிராயிடைலுள்ள மண்டபங்களெல்லாந்தானேபோய்காட்சிநல்கி

இராமாராயர் மண்டபத்தில் சுவாமிவந்தது.

ஆதியில்ராமாராயர் கட்டியலங்கரித்த ஐம்பொன்மணிமண்டபத்தில்
சோதிரெகுராமன் சுந்தரராஜமூர்த்தி சொற்கருடவாகனத்தில்
வந்திரங்கக்கொண்டாடி மாயழகனங்கே மகிழ்வாய்விடையாரி
விந்தையுள்ளமண்டபத்தில் வேதாந்தமூர்த்திவீற்றிருக்குமந்நாளில்
விடாயாரிதான்முதலாய் வேணுகோபாலனுக்கு மிக்நெய்வேத்யமெல்லாம்
தடையறவேதான்புரிந்துசங்குசக்கராயுதன் சார்ந்தமணிமண்டபத்தில்
வெற்றியுடனேமகிழ்ந்து விண்ணோர்க்குபகாரன் வியப்பாகமுன்பெடுத்த
உற்றவதாரங்கள்பத்துந் தேவாதிதேவன் உண்மையுடனேயெவர்க்கும்
தோன்றமகிழ்வாயெடுக்கும்அவதாரநேர்மைகளைச்சொல்லுவேனிப்போது
சான்றகிரேதாயுகத்தில் சர்வபரிபூரணன் தானவர்க்குள்மேன்மைபெற்ற

முதலாவது மச்சவதாரம்.

வேதந்தனைத்திருடியேமலைதனிற்போயொளித்த வெஞ்சோமுகாசுரன்
வீராதிவீரனுன்
வாதந்தனைத்தெரிந்துவாஞேரும்பிர்மாவும் வாட்டமிகவுண்டாகி
வாழ்ந் திருப்பாற்கடலில்
அனந்தசயனம்புரிவோன் ஆதிநாராயணன் அகிலாண்டமூர்த்தி
அழகுமலைப்பூமானை
நினைந்துநினைந்துருகி நீலமேகவர்ணு நீடாழியிற்துயின்ருேன்
நெடியவாதஞ்சமென்று
அச்சமுடன்போற்றிநின்ற அமரர்தனைப்பார்த்து அபயாஸ்தமுங்கொடுத்து
ஆதிநாராயணனும்
மச்சவடிவெடுத்து மாயாவதாரன் வரதவெங்கடேசன்
வாருதியிற்ருன்புகுந்து
சோமுகாசுரனுடன் சுந்தரராஜமூர்த்தி சோலைமலைநாதன்
துரிசாகத்தானெதிர்த்து
தாயிதவெம்போர்புரிந்து சங்காழிநாதன் சரசகோபாலன்
தானவனைத்தான்ஜெயித்து
வேதந்தனைக்கொணர்ந்து வேணுகோபாலன் வேதாந்தமூர்த்தி
வேதனுக்குத்தான்கொடுத்து
போதந்தனையெவர்க்கும் புண்டரீகாக்ஷன் புவியேழையுமளந்தோன்
போதித்துமுன்னளில்
அன்னவடிவாகி யருமையின்றன்பொருளை யன்றலுங்கோதி
யகிலமெல்லாந்தான்படைக்க
சொன்னயமாக்கூறு தூயசெகநாதன் தொல்லுலகைக்காத்த
தோன்றதோர்காரணமும்
தானவரும் வானவருஞ் சாக்கியமாய்மந்திரகிரி
தானெடுத்துவாருதியில்
ஈனமறவேநிறுத்தி யேழுமலைநாதன் இடபகிரிவாசன்
இசைவாகத்தான்கடைய
மாயன்பலம்பொருக்கமாட்டாமல் மந்திரகிரிவாரியதனிற்புதிய
வானவரெல்லாங்கலங்கி
தூயன்மகாநேயன் சோலைமலைநாதன் சொல்லாவினைமெய்த்தோன்
சுந்தரராஜப்பெருமான்
அடியிணையிற்போய்விழுந்து அனந்தசயனு அரிகேசவாமுகுந்தா
ஆரணுதஞ்சமென்று
படிமீதினிற்பணிய பச்சைமாலச்சுதன் பசுமேய்க்குநாதன்
பாரளந்தமேகவண்ணன்
அண்டர்க்கருள்கொடுத்து ஆமைவடிவெடுத்து ஆழிதனிற்ருன்புகுந்து
அமுங்காமல்மாமலையைக்
கொண்டல்முதுகிற்சுமந்து கோவர்த்தனகிரியைக் குடையாகத்
தானெடுத்தோன் குளிருமமுர்தங்கடைந்து

வானோர்க்கமுதந்தான் வைகுண்டவாசன் வடவாலிலைதுயின்றோன்
மாலிருஞ்சோலைப்பரமன்
தானோர்க்கஞ்சாதமுகில் தாமோதரப்பெருமான் சாரங்கபாணி
தண்டாமறைப்பாதன்
மந்தரகிரியைச்சுமந்து மாதவாகோவிந்தா மதுசுதனாமுகுந்தா
வானோரைக்காத்துவரந்
தந்ததுபோலென்தனையுஞ் சங்குசக்ராயுதா தானளந்தபாதா
தர்க்காக்கவேண்டுமிங்கே

௩-வது வராகவதாரம்.

தொல்லுலகைப்பாய்போலே சுருட்டிப்பாதாளமதிற்றோற்றமுடனொளித்த
சொல்லிரணியாக்கனைமுன்
பன்றியுருவெடுத்து பண்ணைமலைநாதன் பக்தர்க்கனுகூலன்
பாய்ந்திரணியாக்கனுடன்
நின்றுசமராடி நீராழிவண்ணன் நெடியமாலரிகேசன்
நேர்மையுடனேஜெயித்து
தேவர்களைக்காத்ததுபோல் திருமாலிருஞ்சோலை தேவாதிதேவாயென்
சிந்தைவருத்தந்தீர்த்துக்
காவாபெருமானே கண்ணபுரமாலே காரூழிவண்ணா
காக்கக்கடனுனக்கு
தொல்லுலகைக்காப்பதுபோற் சோலைமலைநாதன் சூரர்குலகாலன்
சுந்தரராஜப்பெருமான்
சொல்லிரணியாக்கனைப்போய் பன்றியுருவாகச் செயராகவன்முகுந்த
செயித்தோர்காரணமும்

௪-வது நரசிம்மவதாரம்.

ஆதிகிரேதாயுகத்தில் ஆயிரத்தெட்டண்டம் அதிகாரஞ்செய்த
அவ்விரணியாசூரன்
வேதனைகள்செய்து விண்ணோர்முதலான மேதினியோர்தம்மை
மிகவேவருந்தவைத்து
அரியென்றமந்திரத்தை அன்பாயுரையாமல் அகிலமெல்லாந்தன்பெயரை
யாதரவாய்த்தான்பதிந்து
விரிவாயிரணியனும் மேதினியைத்தானாள வெம்பிமனதுடைந்த
விண்ணவரெல்லாந்திரண்டு
முதலைப்பிடித்திழுக்க மும்மதமால்யானை யாதிமூலமெனவோலமிடும்
முறைகேட்டுச்சீக்கிரமாய்
சதமாய்ச்சிறைக்கருடன் றன்முதுகிலேறிச் சக்கரத்தைவிட்டுத்
தனிமுதலையைப்பிளந்து
ஆனைக்குவந்த ஆபத்தைக்காத்த அகிலாண்டகோடி
அனாதரக்ஷகாபரமா
ஏனைப்பழம்பொருளே யெளியார்க்கெளியோனே இமையோர்க்குபகாரா
இரணியனார்பட்டதுயர்

சொல்லமுடியாது சோலைமலைநாதாகந்தராயெங்களுக்குத்
துணைசெய்யவேணுமென்று
வல்லபமாய்த்தேவரெல்லாம் மாயாவதாரன் மரகதமேனிக்கடவுள்
மலரடியினிற்பணிய
பேரிரணியன்றனக்குப் பிரகலாதேவன் பிள்ளையெனவந்துதிக்கப்
பெற்றிமையதாய்வளர்த்து
சூரியன்றன் பள்ளிமைக்குச் சுக்கிராச்சாரியிடந்தோற்றமுடனேகொடுக்க
சுதனையருகேயழைத்து
ஏய்ந்தசுபதினத்தில் இரணியநமாவெனவே யியம்புமெனப்பாலன்
இதுபாவம்பாவமென
வாய்ந்தஅரிநமாவெனவே மைந்தனிதமாயுரைக்க வல்லிரணியன்சினந்து
மைந்தன்றனைவருத்தி
ஏடாசிறுவாநீ யியம்புமரிகேசன் எவ்விடத்திற்றானிருப்பான்
எந்தனுக்குக்கூறுமென்று
வாடாதவனழைக்க மைந்தன்பதறி மானதபூசையதாய்
மாதவனைப்போற்றிசெய்து
மைந்தன்பதறி மானதபூசையதாய்
மாதவனைப்போற்றிசெய்து
தூணிலுந்துரும்பினு மித்தொல்லுலகெல்லாம் நிறைந்துதொண்டர்தமைக்
சூழ்ந்திருப்பானென்றுரைத்தான் [காப்போன்
தூணிற்சினந்துசூரிரணியன்புடைக்கத் தூணைப்பிளந்ததனிற்
சோலைமலையழகன்
நரசிங்கரூபமதாய் நாடியற்றூணில் நடுவேபிளந்தெழுந்து
நான்மாலைக்காலமதில்
உரதுங்ககூர்நகத்தால் உயிரிரணியாசூரனை உடலைப்பிளந்து
உதிரங்குடித்ததிற்பின்
பகர்பிரகலாதனுக்கு பட்டமுங்கட்டி பண்ணவரைத்தற்காத்து
பற்கடலிற்பள்ளிகொண்டார்
சிகரயிடபாசலத்தாய் மேதரைக்காத்ததுபோற் சிறியேனைரக்ஷிக்கத்
திருவவதாரமுமெடுத்தாய்

ரு—வது வாமனவதாரம்

மண்டலமெல்லாம்புரந்த மாவேலிச்சக்கிரவர்த்தி மகராஜன்
மனுநூல்முறைதவரா
தண்டரெல்லாங்கொண்டாட அவர்பிபுர்ததர்மத்தால்அண்டாதியண்டமே
மயங்கவனுக்குள்ளாக [லா
இருக்கயிடமில்லாமல் இமையவரெல்லாங்கலங்கியிருகடலிற்பள்ளிகொண்
டெம்பெருமான்றன்னிடத்தில் [ட

உருக்கமுடன்றானுரைக்க உபர்பெருமான் கேட்டுலகமதில்மாவெலிமுன்
வோர்வாமனனாகி
மாவெலிமுன்மூவடிமண் வாங்கியொருமூவுலகம் வாகாயிரண்டடியாய்
வாய்ப்பாகவேயளந்து
தாவியவன்சென்னியிலுந் தாமோதரப்பெருமான் சர்வலோகாதிபன்
தாமரைப்பாதஞ்சூட்டி
விண்ணவரைத்தற்காத்தான் விதுரன்மனையிற்புகுந்து மேனாள்விருந்துண்
டவேதாந்தமாமூர்த்தி
கண்ணவிழும்பைந்துளவோன் கற்பமதிற்றான்றயின்றோன் ஜகமோகன
ரூப தானிருந்தானோர்காலம்

௬-வது பரசுராமாவதாரம்.

சமதக்கினிமுனிவன் றவத்தாலவதரித்த ததிப்பரசுராமனெனத்
தரணிதனிலுதித்து
விமிதமிகுமரிகுலத்து வீராதிவீரன் வேந்தனவன்கார்த்த
வீரியன்றன்மக்களுந்தான்
தவசிலுயர்ந்த சமதக்கினியை தவச்சாலையிற்போய்
தானேகொலைபுரிய
அவசியமாய்மாமுனிவன் அருமையுள்ளதேவி யகத்திலடங்காது
ஆகுலமுற்றேமயங்கி
இருபத்தொருதிரமாம் அணைமார்பினிலடிக்க எண்ணிமனதில்
இரவிகுலவேந்தர்களை
இருபத்தோர் தலைமுறையும் என்கைமழுவாயுதத்தாலெமலோகஞ்சேர்ப்ப
ஏகாந்தமாய்ச்செயித்து
விரவிவருங்காசிபர்க்கு வெய்யோன்குலவேந்தன் மிக்கவுலகத்தை
விரைந்து தானங்கொடுத்து
தவம்புரியச்சென்ற தாமோதராமுகுந்தா சாரங்கபாணி
சர்வலோகாதிபனும்
நவம்புரி யஷ்டாக்ஷரத்தாய் நாராயணனாய்
நவஓம்கிரீம்சிவாயா

௭-வது ஸ்ரீராமாவதாரம்.

ஜயோத்தியாபுரியை யாளுந்தசரதனுக் கருமைமகனாகவந்து
அம்புவியிலேவளர்ந்து

சையோத்தியாய்மிதிலைஜனகராஜன்மகளைத் தான்கலியாணம்புரிந்து
தம்பியுடன்ஜானகியும்
சீராய்த்தனைச்சூழசிறியதாய்சொற்படியே சென்றுவனந்தனிலே
தென்னிலங்கையிராவணனும்
தாராரும் பூங்குழலாள் ஜானகியைக்கொண்டேகத்தானே தொடர்ந்தே
சார்ந்தசுக்ரீபன்முதல்
வீரனுமான்முதலால் வெள்ளமெழுபதுடன் விரல்வானரர்சூழ
வேலைதனைச்சேனையது
இராவணன்கும்பகர்ணன் இந்திரசித்தன் இராக்ஷதரையெல்லாம்
இமைநேரத்துக்குள்ளாக
மூலபலங்களையும் யொருகணையால்முடித்தே மூதண்டலோகம்
முழுதும்பிழைக்கவைத்து
சீலமிகுமிதிலைச் சீதைசிறைமீட்டித் திருவடியைநம்பும்
தீரன் விபூஷணர்க்குப்
பட்டமதுகட்டியபின் மரமபுருடோத்மன் பாரளந்தபாதன்
பாங்காய்நகர்புகுந்து
திட்டமுடன்மகுடம் சென்னிமேற்சூட்டிச் சிறப்பாகவாழ்ந்திருந்தாய்
திருவேங்கடாதிபனே
தேவரிடுக்கமெல்லாந் திருமாலிருஞ்சோலை திருப்பதிவாழ்மார்பன்
தீர்த்தாய்நீமுன்னாளில்
காவற்பெருமானே கரியமுகில்வண்ணா காதலுடனென்னைக்
காக்கக்கட னுனக்கே

௮-வது பலராமாவதாரம்.

உத்தமியாம்ரோகணிக்கு உண்மைமகனாயுயர்ந்த பலபத்திரனாய்
உற்பவித்திதுப்பூவுலகில்
அந்தமுடன் ராக்ஷதரை யன்னாள்தனிற்செயித்துஅண்டர்பயந்தீர்க்கவந்த
ஆதிமூலப்பொருளே
அடிமையங்கிறது ஆயிரநாமத்தையா ஆனந்தரூபா
ஐயாவுனக்கழகோ
கொடுமைபுரியாதோ கோதண்டராமாகோபாலகிருஷ்ணா
குற்றமெல்லாம்நீபொருப்பாய்
சிரியோர்புரிந்தகுற்றந் திருமாலிருஞ்சோலை தேவாதிதேவன்
தேர்ந்தோர்பொருக்கலையோ
அறியாமல்நாயேன் அழகமலைத்தெய்வம் ஆதிநாராயணனே
அனந்தகுற்றஞ்செய்தாலும்

பொறுக்கக்கடனுனக்கே பூமாதுகேள்வா புண்யபுருடோத்மா
புத்திரனைக்கண்பாரு
வெறுக்கிலெனக்காதரவார் வேதாந்தவித்தே வெள்ளிமலையானே
விண்ணோர்க்கருள்புரிவாய்
கல்லோஇரும்போ காயாம்புவண்ணா கமலாசனிக்கணவா
கர்த்தனேஉன்மனது
பொல்லாவிஷமருந்திப் புரமூன்றெரித்தோன் புயங்காபரணன்
புங்கவரைக்காக்கலையோ
வஞ்சகத்தைவிட்டுவிடும் மாயாவதாராவரதவெங்கடேசா
வந்தென்குடிகாப்பாய்
மிஞ்சுபுகழ்பெற்றோர் பக்தஜனங்கள் மேன்மையுடன்வணங்கும்
வெங்கடாசலபதியே

௯-வது கிருஷ்ணாவதாரம்.

நந்தன்கோன்மைந்தனென வந்தஅவதாரம் நான்சொல்வேனிப்போது
விந்தையுடன்தேவர்களும் பூமகளும்வந்து வெகுவாய்முறையிடவே
கருங்கடற்போல் பாற்கடலில்கண்ணபிரான்கண்ணுறங்கும் யோகம்விட்டு
நெருங்கிவருந்தேவருக்கு நீலமேகசுவாமி நிரையாய்வரங்கொடுத்து
அனந்தசயனத்தைவிட்டு ஆதிமாமூலம் அன்பாகவேயெழுந்து
நினைந்துநெடுமாலழகா நீயும்நேர்மையுடன் முன்னாளில்
வடமதுரையாளுஞ் சூரசேனன்புதல்வன் வசுதேவராஜனென்போன்
திடமாய்மணம்புரிந்த பெண்ணுக்கணிகலமாம் தேவகியாள்தன்வயற்றில்
பூமிபாரந்தீர்க்கப் புண்யபுருடோத்மன் புத்திரனாகச்செனித்து
நேயமுடன் திங்கள்பத்துந் தேவகிக்கு நேர்மையுடனேநிறைய
தருமந்தழைத்தோங்க சர்வலோகேசனைத் தான்தேவர்போற்றிசெய்ய
கருமமகன்றுவிட காயாம்புமேனியனைக்காசினியோர்கொண்டாட
ஆவணிமாதமதில் அண்டர்க்குபகாரன் அவதாரஞ்செய்கையிலே
தேவரெல்லாங்கொண்டாட ஸ்ரீரெங்கநாதன் திருப்பாற்கடலைவிட்டு
சங்குசக்கரந்தனுவாள் சச்சிதானந்தனுக்கு தண்டாயுதமுதலாய்
செங்கரங்கள் நான்கினிலுஞ் செங்கமலக்கண்ணனுக்கு சிறப்பாய்தகதகெ
மூவுலகந்தானவனாய் முகுந்தன்பரந்தாமன் முத்தொழிலுந்தானடத்தி [ன
தேவுருவாய் வீற்றிருக்குங்கண்ணபுரமாயன் ஜென்மித்தகாரணத்தை
கண்டேயதிசயித்து வசுதேவன்தேவகியும் கண்கொள்ளாப்பேரின்பம்
கொண்டுமனமகிழ்ந்து கோவிந்தமூர்த்தியைக் கொண்டாடித்தான்துதிக்க
கஞ்சன்றனைவதைத்து வடமதுரையாண்ட காயாம்புமேனியேவுன்
தஞ்சமென்றேனெனையாளுங் கிருஷ்ணாவதாரந்தானெடுத்தகாரணமும்

௰ - வது மோகினி யவதாரம்.

திருப்பாற்கடல்கடந்து தில்லைகோவிந்தன் திருபதிவாழ்நாதன்
திருவேங்கடப்பெருமான் தேவர்க்கமுதமதை
விருப்பமுடன்கொடுக்கவென்று வேதாந்தமூர்த்திமேகநிறச் செந்திருமால்
மேதினியையன்றளந்தோன் விண்ணோர்முதலான
அரக்கர்களையுஞ்சேர்த்து ஆதிநாராயணன் ஆதிமாமூலம்
அண்டருக்குபகாரன் அழகமலைத்தெய்வம் அமுர்தங்கடையையிலே
பிறக்குமமுதக்குடத்தை பேழ்வாயரக்கர் பிடுங்கியந்ததேவருக்கு
பிரியமுடன் நல்காமல் பேதமுடன்வாதுசெய்ய
வானவரெல்லாமயங்கி மாயழகமூர்த்தி வரதவெங்கடேசா
மாலிருஞ்சோலைமலை மாதவாவென்றுவளமாய் முறையிடவே
தானவரைவெல்லவென்று சக்ராயுதப்பெருமான் சாரங்பாணிநண்பன்
தாரணியெல்லாமளந்தோன் ஜகன்மோகினிரூபம்
கோதைவடிவெடுத்தான் கோவிந்தமூர்த்தி கோபாலகிருஷ்ணன்
கோதண்டபாணி கூந்தலோமேகநிறம் [ன்பிறையாம்
புருவமோஇந்திரவில்லாம் புருகூதனுக்கிளையோன் பொருந்தும்நெற்றிவா
புனிதமலையழகன்பூமான்விழிகள் பொருந்துநீலோற்பலமாம்
திருவமருஞ்செண்பகப்பூ திருமாலிருஞ்சோலை சிவராஜதானி
செந்திருமணாளன் திகழ்நாசியாய்விளங்க
கபோலமினக்கண்ணாடி காதிரண்டும்வள்ளை கழுத்தோயிளங்கமுகு
காந்திதனமோகலசம் கவிந்தவயிறாலிலையாம்
உபயமணிப்புயங்கள் ஓங்கியதோர்மூங்கில் ஒளிகையரவிந்தம்
உற்றவிரல்செம்பவளம் ஓதுகிளிமூக்குநகம்
உந்தியோநீர்ச்சுழியாம் உடுக்கோயிடைத்துடைகள் ஓர்ந்தவிளங்கதலி
ஊரெரும்புரோமமதாம் ஓதுமொழிகோகிலமே
சிந்துமமுர்தச்சாயல் செய்யவிராலாங்கணைக்கால்சீர்கொள்துலையாம்பாடு
செம்பஞ்சுபொற்பாதம் ஜெகன்மோகினியாகி
அன்னத்தைப்போலநடப்பான் அண்டர்க்குபகாரன் ஆதிமகாமூலம்
ஆதிபரந்தாமன் அம்புயக்கண்ணாற்பார்ப்பான் [ணன்
மின்னத்தைப்போன்மிடற்றான் வேலைகனிற்கண்டுயின்றோன்வேதநாராய
மேலோர்க்குபகாரன் மேகவண்ணன்மூர்த்தி வீணைதனைமீட்டிடுவான்
கண்ணால்மருட்டிடுவான் காகுத்தமாமூர்த்தி காராழிவண்ணன்
கமலாசனிக்கணவன் காமனைக்கையாலழைப்பான்
பண்ணாமல் மயக்கிடுவான் பஞ்சவர்சகாயன் பாரளந்தபாதன்
பரதனுக்குமூத்தோன் பார்த்துமெள்ளவேனகைப்பான்

இடைதுவளவேடப்பான் இடபாசலத்தான் எளியர்க்கெளியோன்
எந்தைபரந்தாமன் எய்ந்தமின்னல்போல்மறைவான்
கடைவிழியினல்மருட்டி காமனைமுன்யீன்ரோன் கருணைகரத்தெய்வங்
காரானையைக்காத்தோன் கண்ணனெடுத்த கனமாய்கைதோற்ருமல்
அரக்கரெல்லாந்தான்மயங்க அமரரனுகூலன் ஆரணத்தைமுன்பகர்ந்தோன்
ஆதிநாராயணன் அமுதமதைதான்வாங்கி
சிறக்கவேதேவருக்கு தேவாதிதேவன் திருமாலறிமுகுந்தன்
செங்கையிற்கங்கணிந்தோன் சீராகவேபகிர்ந்தான்

வேறு சந்தம்.

அந்தஅவதாரமுடன் அழகமலைத்தெய்வம் அவதாரமீரைந்தும்
பந்தமுடனேகாட்டி இராமாராயர்மண்டபத்தில் பத்தியுலாத்தியபின்
செய்தேநெய்வேத்தியமும் செங்கமலக்கண்ணனுக்கு தீபதூபங்கொடுத்து
உய்யராமாராயருக்கு உலகளந்தநாதன் உயர்ந்தபரிவட்டமது
தான்மகிழ்ந்துகாட்டியபின் தாமோதரப்பெருமான் தங்கச்சிவிகையின்மேல்
வான்மகிழ்ந்துகொண்டாட மாயாவதாரன் வைகைநதியைக்கடந்து
காணிக்கைகொப்பரையைக் கள்ளழகமூர்த்தி கண்டுமனமகிழ்ந்தேக
மாணிக்கத்தாற்சமைத்த வெங்கடசாமிநாய்க்கர் மண்டபத்திற்ருளிருக்க
அந்திரேரங்கதிரோன் அய்யன்தெரிசனை கண்டகமகிழ்ந்துவட திசையில்
விந்தையாய்த்தானேக வேணுகோபாலனுக்கு மெய்குளிரத்தென்றல்வர
அப்பனெழுந்தாராம் அகிலைத்தேவனை அண்டரெல்லாங்கொண்டாட
இப்புவியோரும்போற்ற எங்கள்சுந்தரராஜன் இடையர்மண்டபத்திறங்க
அங்கிருந்தயாதவர்கள் அழகமலையானுக்கன்பாயுபசரித்து
தங்கள்குழாங்களுடன் தாமோதரனை தரிசித்துப்போற்றிசெய்ய
அன்பாய் சுயம்பாகி அகிலலோகேசனுக்கு அலங்காரகற்றளிகை
முன்பாகபாயாசம் முகில்வண்ணநாதனுக்கு மூயங்குபுளியோதரையும்
சக்கரைப்பொங்கல் ஜானகிநாதனுக்குச் சம்பாவும்தோசையுமாம்
முக்கியமாய்வைத்து மோகினிரூபனுக்கு முன்பாய்நிவேதனமும்
தூங்கமுடன்கற்பூரந் தீபமொடுதூபந்துரிதமுடனேகொடுத்து
அங்கமிகப்பூரிக்க ஆதிமாமூலம் யாதவர்க்குக்காட்சிநல்கி
திடமாகக்கேட்டவரம் யாவருக்கும் சித்திக்குமென்றுசொல்லி
சடகோபஞ்சாத்தி தீர்த்தமுடன் துளசிசாதித்தாரப்போது
தேவர்மலர்மாரிபெய்ய சங்காழிக்கையனைக் திக்கெல்லாங்கொண்டாட
மாவரங்கள்தான்கொடுத்து மைசூர்மண்டபத்தில் வந்திரங்கமாயழகன்

பூபல்லாக்கில் சுவாமி கள்ளர்வேடமெடுத்து மலைக்கேகுதல்.

பூமியெல்லாம்கொண்டாட புண்ணியபுருடோத்மனுக்குபொருந்துமபிஷே
சாமிக்கியற்றியபின் சங்குசக்ராயுதன் சார்ந்தகள்ளர்போலாக [க
லைதுபுரங்கொண்டையிட்டு மாயாவதாரனுக்கு வாகுருமால்சுங்குவிட்டு
நிலமிலகுகாதினிலேதொங்குகடுக்கன் நிமலனுக்குத்தோடணிந்து
அஞ்சுமணிவல்லயமும் ஈட்டிவளதாரி அடுக்காயலங்கரித்து
பஞ்சுமெத்தையிட்டபுஷ்பம் பல்லாக்கில்மாயோன் பரிவாயெழுந்திடவே
ஆயிரம்பொன்சப்பரத்தை தோள்குலுங்கித்தூக்கும் அப்பன்கருப்பனிடம்
போய்வாரேனென்றுசொல்லிபூவுலகைத்தானளந்தோன் புறப்பட்டார்பல்
அந்தரத்துந்துமியும் அழகமலைநாதனுக்கு ஆனைமேற்பேரிகையும் [லக்கில்
வந்ததிர்த்துத்தான்முழங்க முப்பத்திரண்டுவகை வாத்தியங்களோலமிட
ஸ்ரீவல்லிபுத்தூரில்வளர் நாச்சியாரம்மனுக்கு திருமாலைபட்டனுப்பி
பூவிலுள்ளோர் தான்செலுத்தும் காணிக்கைக் கொப்பரையையுந்திமகிழ்ந்
மானகிரிவாழும்வெள்ளையம்பலத்தை வரவழைத்தாரப்போது[தேபார்த்து
ஜானக்கியாடன்கணவன் சாமிமலையழகன் தானேதுரைக்கலுற்றார்
உண்டியலைக்காத்து அழகர்தேவஸ்தானத்தில் ஒப்பிவிக்கவேணுமென்று
கண்டிதமாய்த்தானுரைத்து அம்பலகாரருக்கு கண்ணன்வரங்கொடுத்து
பதனம்பதனமென்று பாரளந்தமாயன் பாங்காய்ச்சவாரிவிட்டார்
மதவாரணத்திரளும் மாயாவதாரன் மத்தாப்புசோதிமின்ன
அம்புவியோர்கொண்டாட ஆதிமூலத்துக்கு அதிர்வெடிகள்தான்முழங்க
பம்புப்பூபல்லாக்கு பச்சைமாலச்சுதற்கு பக்கமெல்லாந்தான்திரும்ப
பூக்குடைகள்சூழ்ந்துவர பலமண்டபந்தோறும் போய்புகுந்துமாயழகன்
தாக்குடையானை இராமசாமியம்பலந் தன்னுடையமண்டபத்தில்
வந்திரங்கிமாயவனுஞ் சுந்தரராஜமூர்த்தி மகிழ்வாய்விடாயாரி
சந்தோஷமாகவேதான் ஜானகிமணாளனுந் தானெழுந்தாரப்போது
கள்ளர்தனக்கஞ்சியங்கே மஞ்சிக்கூடத்தை கண்டங்கு நில்லாமல்
வள்ளலும்வாருரும் மூணுமாவடிதனக்கு மாவேகமாகவேதான்
வந்தாராம்மாயழகர் வெள்ளைமண்டத்தில் மங்களமாய்த்தானிருந்து
பந்தானமாகவுமே ஈச்சனோடைவிட்டுப் பாங்காகவேயெழுந்து
காரைக்கிணறுக்கடந்து மறவமண்டபத்தைக் கண்டுமனமகிழ்ந்து
பாரிலுள்ளோர்கொண்டாட அவ்விடத்தில் பைந்துளவோன்தானிறங்கி
அன்றிரவெல்லாய்கூத்து ஆதிமாமூலம் அம்மண்டபந்தனிலே
வெற்றியுடனேபார்த்து வேணுகோபாலன் விடிந்தவுடன்பல்லாக்கில்
பூமண்டபங்கடந்து அப்பன்திருப்பதியில் போயிறங்கிமாயழகர்
வேண்டியபேர்சூழ்ந்துவரவிமலைமகிழ்நாதன் வெகுவினோதங்களுடன்

வல்லந்தரிகடந்து பொய்கைக்கரைச்சாலை கார்வண்ணன் தான்கடந்து
வல்லயங்கைப்பிடித்து மாயழகமூர்த்தி வருகிறார்சாலைவழி
சீர்கொளம்மாமண்டபமுங்காட்டுப்பிள்ளையார்கோவில்சீக்கிரமாககடந்து
பார்புகழுந்தோடியைப் பாரளந்தமாயன் பட்சமுடனேகடந்து
மயிலாடுஞ்சோலை வாசற்பிரதானி மாகருப்பன்கோவில்முன்னே
கயிலாயமேருவைப்போல் அழகமலைத்தெய்வம் காயாம்புவந்துநிற்க
வாசற்பிரதானி மாயாவதாரனை வந்துமேதான்பணிய
ஆசையுடனவர்க்கு அருளாழிவேந்தன் அருள்புரிந்துகாட்சிநல்கி
சவ்வாரியாகவேதான் மூலஸ்தானத்தின் முன்சென்றார்சோலைமலை
அவ்வாரியிற்றுயில்வோன் அழகரிலைத்தேவன் அழகமலைசென்றதன்பின்
அப்பன்அழகமலை சுந்தரராஜமூர்த்திக் கபிஷேகந்தான்புரிந்து
செப்பமுள்ளபாற்குழம்பு அதிரசமும்பாயாசம் தீர்க்கவண்ணமும்படைத்து
தீபதூபங்கொடுத்து நீலமேகசுவாமி தீர்த்தஞ்சடகோபம்
ஆவல்பெருந்துளபம் சுந்தரராஜமூர்த்தி யாவருக்குந்தான்கொடுத்து
மூலஸ்தானம்புகுந்து ஆதிசுந்தரராஜமூர்த்தி மகிழ்வாயிருந்தார்
சீலமுள்ள அழகமலை சுந்தரராஜமூர்த்தி சிறப்போங்கத்தான்வாழி.

அழகர் வர்ணிப்பு

முற்றிற்று.

"ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ்" திருமங்கலம்.